Registered as a Newspaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | தை -20 | 03-02-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை-350

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத கண்கவர் தங்க நகைகளை சுத்தமான 22 கரட் தங்கத்தில் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:-48A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

T.P: 024-222 4247

சி-9205 077-6059672

# தென்மராட்சி தெற்கின் மீள்குடியமர்வை ஆராய படையினரின் அழைப்பு மக்களால் நிராகரிப்பு

## படை அதிகாரிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர்

(வடமராட்சி)

**தென்மராட்சி தெற்கின் தனங்கிளப்பு, மறவன்புலோ மற்றும் கைதடி - நாவற்குழி பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது பற்றி ஆராய படைத்தரப்பால் கூட்டப்பட்ட கூட்டத்தை அப்பகுதி மக்கள் பகிஷ்கரித்துள்ளனர். நேற்றுக்காலை கோயிலாக்கண்டிப் பகுதியில் அமைந்துள்ள உயர் பாதுகாப்பு வலயத்தின் நுழைவாயிலில் இக்கூட்டத்திற்கு ஏற்பாடாகியிருந்தது.**

இப்பகுதிகளைச் சேர்ந்த விவசாய சம்மேளனம் ஊடாக படைத்தரப்பு இவ் அழைப்பை விடுத்திருந்தது.

ஆயினும் காலை 9.00 மணிக்கு இடம்பெறுமென அறிவிக்கப்பட்டிருந்த இக்கூட்டத்திற்கு பொதுமக்கள் எவரும் வருகை தந்திருக்கவில்லை. இதனால் அங்கு கூட்டத்திற்கென அமைக்கப்பட்டிருந்த தற்காலிக பந்தலில் மதியம்வரை காத்திருந்த படை அதிகாரிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர். இதேவேளை அங்கு வந்திருந்த ஒருசில பொதுமக்களும் ஏனையோரால் வீதியில் தடுத்துநிறுத்தப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்டனர்.

மேற்குறித்த பகுதிகளில் தம்மை மீளக்குடியமர அனுமதிக்கக் கோரி நாளைமுதல் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை தாங்கள் திட்டமிட்டபடி முன்னெடுக்க உள்ளதாகவும், ஆனால் படைத்தரப்பு ஒருசில அற்ப சலுகைகளை வழங்கி இப்போராட்டத்தை குழப்பியடிக்கவே இக்கூட்டத்தை கூட்டியிருந்ததாக தெரிவித்த அப்பகுதி பொதுமக்கள், அதனாலேயே இக்கூட்டத்தை பகிஷ்கரிக்க தாம் முடிவு செய்திருந்ததாகவும் தெரிவித்தனர். (27)

## தென்மராட்சி மக்களின் போராட்டம் குறித்து ம.உ. ஆணைக்குழு கண்காணிப்புக்குழு விசாரணை

தென்மராட்சி தெற்குப் பிரதேச மக்கள் எதிர்நோக்கும் இயல்பு வாழ்வுப் பிரச்சினைகள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதராலயம் ஆகியன விசாரணைகளை மேற்கொண்டுள்ளன.

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தம் வீடுகளை விடுவித்து மீளக் குடியமர படையினர் அனுமதிக்காததால் தென்மராட்சி தெற்கு, மறுவன்புலோ, தனங்கிளப்பு, நாவற்குழி, கைதடி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் எதிர்வரும் 4ஆம் திகதி சாகும் வரையிலான உண்ணாவிர தப் போராட்டம் ஒன்றை நடத்தப்போவதாக அறிவித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் தென்மராட்சி தெற்குப் பகுதிக்குச் சென்ற மேற்படி அமைப்புக்களின் அதிகாரிகள் மக்களுடைய கோரிக்கைகள் தொடர்பாக கேட்டறிந்து அறிக்கை தயாரித்துள்ளனர்.

மக்களின் இயல்பு வாழ்வு மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பான கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தாமைக்குரிய காரணம் குறித்து படையினரை விளக்கமாக விசாரணையும் நடத்தியுள்ளனர். (32)

## வவுனியா தாளிக்குளம் பகுதியில் சிறுமி மீது பாலியல் பலாத்காரம்

### சந்தேகநபர் தலைமறைவு

(செட்டிகுளம்)

வவுனியா தாளிக்குளம் பகுதியில் 12 வயது சிறுமி ஒருவர் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டதாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சிறுமி தனியாக வீட்டில் இருந்தபோதே முச்சக்கர வண்டியில் சென்ற இளைஞன் இவ்வாறு நடந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட சிறுமி வவுனியா பொது மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனைக்காக நேற்று சேர்க்கப்பட்டார். சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேலதிக விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (21)

## கடத்த தயாராகவிருந்த வாகனங்கள் சில மீட்பு!

(செட்டிகுளம்)

வவுனியாவில் இருந்து கடத்த தயாராகவிருந்த வாகனங்கள் சிலவற்றைக் கைப்பற்றி இருப்பதாக வவுனியா பொலிசார் தெரிவிக்கின்றனர். இரண்டு வான்கள், இரண்டு பேருந்துகள், ஒரு பாரஊர்தி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

மேற்படி வாகனங்களின் இயந்திர இலக்கம், அடிச்சட்ட இலக்கம் என்பன மாற்றப்பட்டு இருப்பதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## கிருலப்பனையில் 2படையினர் உட்பட ஏழு பாதாள உலகத்தவர் கைது

(கொழும்பு)

கிருலப்பனைப்பகுதியில் இரு படையினர் உட்பட ஏழுபேர் நேற்று பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்.

கைதான படையினரில் ஒருவர் இராணுவத்தையும் மற்றையவர் கடற்படையையும் சேர்ந்தவராவர். இவர்கள் இருவரும் படையிலிருந்து தப்பியோடியுள்ளார்கள்.

மேலும் இவர்கள் பிரதான பாதாள உலகக் குழுக்களுடன் இணைந்து இயங்கிக்கொண்டிருந்ததாகவும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலை ஊழியர் சங்கம் நேற்றுமுதல் வேலைநிறுத்தம்!

(வடமராட்சி)

யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்திற்கெதிராக 15 அம்சக் கோரிக்களை முன்வைத்து பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மீண்டும் நேற்றுமுதல் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளது.

ஊழியர் சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட 15 அம்சக்கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கென பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு வழங்கப்பட்ட காலக்கெடு கடந்த மாதம் 22ம் திகதியுடன் முடிவுற்றுள்ளது.

ஆனாலும் எந்தவிதமான உருப்படியான நடவடிக்கையையும் நிர்வாகம் எடுக்காத நிலையில் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க தாம் தீர்மானித்திருப்பதாக ஊழியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஆயினும் நீர்வழங்கல் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சேவையிலீடுபட சங்கம் அனுமதித்திருந்தது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு சக்திகளின் ஆக்கிரமிப்பை தடைசெய்யவே ஒன்றிணைந்தோம்

### சிறில. சுதந்திரக்கட்சி செயலாளர் மைத்திரி பாலசிறிசேன

(கொழும்பு)

வெளிநாட்டு சக்திகளின் ஆக்கிரமிப்பை தடை செய்யவே எல்லாக்கட்சிகளும் ஒன்று சேர்ந்துள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் நான்கு கட்சிகள் இணையும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நிகழ்விலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்நிகழ்வு நேற்று பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றதாக அரசியல் வட்டாரங்கள் கூறின. தினேஸ் குணவர்த்தன (ம.ஐ.மு.) பேரியல் அஸ்ரப்(தேசிய ஐக்கிய முன்னணி) ரஞ்சித் நவரட்ண (எஸ்.எஸ்.எம்.பி) பொடியப்புகாமி(டி.ஜே.வி.பி) ஆகியோர் கைச்சாத்திட்டனர். வெளிநாட்டு சக்திகளின் ஆக்கிரமிப்பை அரசியல், பொருளாதார சுதந்திரத்தைப் பெறுவதற்கு கூட்டணி அதிகாரத்தைப் பெற் இக்கட்சிகள் உதவி செய்ய

(8ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து மனோ-மலிக் இன்று சந்தித்துப்பேச்சு

(கொழும்பு)

மனோ தித்தவெல- மலிக் சமரவிக்கிரம இடையில் இன்று மீண்டுமொரு சந்திப்பு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் உள்ள முரண்பாடு தொடர்பாக ஏற்கனவே பல சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்ற போதிலும் எவ்வித இணக்கங்களையும் காணாத இந்தக் குழு இன்று மீண்டும் பேசவுள்ளதாக அரசதரப்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இரு தரப்பும் நிர்வாகம், அபிவிருத்தி என்பன போன்ற விடயங்களில் எவ்வாறு இணங்கிப்போவது என்பது பற்றியே இதுவரை பேசப்பட்டிருக்கின்றது. முதல் தடவையாக இன்றுதான் சமாதான நகர்வுகளை எவ்வாறு

(8ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா சுதந்திரதினத்தை துக்க நாளாக கடைப்பிடிக்க பொது அமைப்புக்கள் கோரல்

சிறிலங்காவின் சுதந்திர தினத்தை துக்கநாளாகக் கடைப்பிடிக்குமாறு வன்னி, யாழ்ப்பாணத்திலுள்ள மேலும் பல பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. அத்துடன் பல்வேறு நடவடிக்கைகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளன.

பளைப் பிரதேசத்திலிருந்து கறுப்புப் பட்டியணிந்து வீதிப் போராட்டம் செய்வதுடன் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் கறுப்புக் கொடிகளைக்கட்டி தமது எதிர்ப்புக்களைக்காட்டவுள்ளதாக நேற்று பளை வர்த்தகர் சங்கத்தால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை சுதந்திர தினத்தன்று பொது இடங்கள் பாடசாலைகள், இல்லங்கள் என்பவற்றில் கறுப்புக் கொடிகளைக் கட்டி துக்க தினமாக அனுஷ்டிப்போம் என பாண்டியன்குளம் பிரதேச வெகுசன அமைப்புக்களின் ஒன்றியமும் துணுக்காய் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையும் கேட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பொது நிறுவனங்கள், அரச, அரசசார்பற்ற நிறு

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

நிசாந் சோதிலிங்கம் எனும் பெயருடைய அ.அட்டையும், பயண அனுமதி அட்டையும் உள்ளடங்கிய (பேஸ்) முல்லைத்தீவுக்கும் முள்ளியவளைக்கும் இடையில் 30-01-2004 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் முல்லைத்தீவு கச்சேரியிலோ அல்லது புதுக்குடியிருப்பு ஈழநாதம் பணிமனையிலோ ஒப்படைக்கவும். (3976)

## உலர்உணவு விநியோகம்

இடம்பெயர்ந்தோருக்கான நவம்பர், டிசம்பர் மாத உலர் உணவு விநியோகத்தினை உடன் மேற்கொள்ளும் வண்ணம் கரைச்சிப் பிரதேச கூட்டுறவுச்சங்கங்களுக்கு கரைச்சி பிரதேசசெயலர் பொன் நித்தியானந்தம் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதனடிப்படையில் நவம்பர், டிசம்பர் மாதத்திற்கான உலர் உணவு முத்திரை 107ஏ,பி.108ஏ ஆகிய புள்ளிகளுக்கான உலர்உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்பெற நடவடிக்கை மேற்கொள்ளப் பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.(சோ)

# மூதூர் ஈச்சிலம்பற்றுப் பகுதியில் புதிய வைத்தியசாலைக்கு அடிக்கல் நாட்டல்

(திருகோணமலை)

உலக வங்கியின் நிதி உதவியுடனான வடக்கு-கிழக்கு அவசர மீளமைப்பு (நீரப்) திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசமான மூதூர் கிழக்கில் ஈச்சிலம்பற்றுக் கிராமத்தில் சுமார் 2கோடி ரூபா செலவில் நிறுவப்படவுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிக் கட்டடவளாகம் ஒன்றுக்கு நேற்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அத்திவாரக்கல் நாட்டப்பட்டது. விடுதலைப்புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் முதலாவது அத்திவாரக்கல்லை நட்டுவைத்தார். அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் ஈச்சிலம்பற்று பிரதேசப் பொறுப்பாளர் தங்கன், மூதூர் பிரதேசசெயலாளர் ஏ.நடராசா, கிளிவெட்டி ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி டாக்டர் சௌந்தரராஜா, கட்டடத் திணைக்களதொழில் நுட்ப அதிகாரி எஸ்.கங்காதரன், கட்டட நிர்மாண வேலைகளைப் பொறுப்பெடுத்துள்ள ரோயல் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவன அதிபர் எஸ்.ஜெகதீஸன் ஆகியோரும் மற்றும் பல பிரமுகர்களும் அத்திவாரக்கற்களை நட்டனர். ஈச்சிலபற்று ஆஸ்பத்திரி கட்டட வளாகம் மத்திய மருந்தகம், வெளிநோயாளர் பிரிவு, பிரசவவிடுதி, வைத்தியஅதிகாரி விடுதி முதலியவற்றைக் கொண்டதாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டது.

மூதூர்-மட்டக்களப்பு வீதியில் ஈச்சிலம்பற்றுக் கிராமத்தின் மையப் பகுதியில் ஏழு ஏக்கர் காணியில் புதிய ஆஸ்பத்திரிக் கட்டட வளாகம் அமையவிருக்கிறது. ஈச்சிலம்பற்று-வெருகல் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஒன்பது கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டது. 24 கிராமங்களை உள்ளடக்கியது. சுமார் 30ஆயிரம் மக்கள் வாழ்கின்றனர். தற்போது ஈச்சிலம்பற்று பிரதேச மக்கள் வைத்திய தேவைகளுக்காக சேருவில பிரதேச செயலர் பிரிவில் உள்ள சேருநுவர ஆஸ்பத்திரி அல்லது கிளிவெட்டிக்குச் செல்ல வேண்டியுள்ளது. ஈச்சிலம்பற்றுப் பிரதேசத்தில் அரச டிஸ்பென்ஸரி உள்ளது. கிளிவெட்டி ஆஸ்பத்திரியிலிருந்து வாரத்திற்கு இரு தடவை டாக்டர் ஒருவர் சென்று சிகிச்சையளித்து வருகின்றார். ஆனால் நிரந்தரமாக ஒரு டாக்டரும் அங்கு சென்று பணியாற்ற முன்வருவதில்லை. இதனால் வாரத்தில் இரு நாட்கள் தவிர ஏனைய நாட்களில் மருந்தகம் மூடப்பட்டே உள்ளது.

ஈச்சிலம்பற்றில் நேற்று அத்திவாரக்கல் நாட்டப்பட்ட புதிய ஆஸ்பத்திரிக் கட்டட வளாக நிர்மாண வேலைகள் இவ்வாண்டின் இறுதிக்குள் பூர்த்தியடையும் என்று தெரிவிக்கப்பட்டது. (25)

# உந்துருளிகள் மோதிக்கொண்டதில் தகப்பனும் மகனும் காயம்

(அலுவலக செய்தியாளர்)

இரு உந்துருளிகள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் கிளி. மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேற்படி சம்பவம் நேற்று காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி காக்காக்கடைச் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் இரு உந்துருளிகளும் சேதத்திற்குள்ளானதுடன் தந்தையும் மகனும் காயங்களுக்குள்ளான நிலையில் கிளி. மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நா. சதீஸ் (வயது-45) ச.பிரசாத் (வயது-12) ஆகிய இருவருமே இச்சம்பவத்தில் காயங்களுக்குள்ளான நிலையில் சிகிச்சை பெற்று வருபவர்களாவர்.

தமிழீழ காவல்துறை வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## -கிளி.பெண்கள் அ.பு.நிறுவனத்தால் -

# உழைப்பாளரை இழந்த 10 குடும்பங்களுக்கு சுயமுயற்சிக் கடனுதவி வழங்கல்

கிளிநொச்சி பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினால் பளைப்பிரதேசத்தில் உழைப்பாளரை இழந்த 10 குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சிக்காக கடனுதவி வழங்கப்பெற்றுள்ளது.

பளைப் பிரதேசத்திலுள்ள ஊர்வணிகப்பற்று, கோவில்வயல் கிராமத்தில் இக்கடன் உதவி வழங்கும் நிகழ்வு பளைப்பிரதேச உதவியாளர் சுதாசியின் ஒழுங்குபடுத்தலில் காலை 10.00 மணிக்கு பெ.அ.பு. நிறுவன இணைப்பாளர் மா.செல்வி தலைமையில் ஆரம்பமானது. அவர் தனதுரையில் திட்டச் செயற்பாடுகள் தொடர்பாகவும், சேமிப்பின் முக்கியத்துவம் தொடர்பாகவும் கருத்துக்களைப் பரிமாறியதுடன் ஊர்வாணிகப்பற்று கிராம அலுவலர் திருமதி குணரஞ்சினி, கோவில்வயல் கிராம அலுவலர் வல்லிபுரம் தொழில்களின் முக்கியத்துவம் தொடர்பான கருத்துக்களை பகிர்ந்தனர்.

தொடர்ந்து இத்திட்டத்தினை யு.என்.டீ.பி. நிறுவன (ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம்) நிதியுதவியுடன் செயற்படுவதாக குறிப்பிட்டதுடன் உழைப்பாளரை இழந்த 10 குடும்பங்களுக்கு 170,000/= ரூபா பெறுமதியான கடன் சுயதொழில் முயற்சிக்காக வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ஊர்வாணிகப்பற்று மாதர் சங்கத் தலைவியும், கோவில்வயல் மாதர் சங்கச் செயலாளரும் கலந்து கொண்டனர்.

# நிரந்தர காணி அனுமதிப்பத்திரம் கிளி.யில் வழங்க நடவடிக்கை

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக காணி அலுவலகத்தினரால் கரைச்சிப் பிரதேச செயலகபிரிவிலுள்ள தற்காலிக காணி அனுமதிப்பத்திரங்களை நிரந்தரக் காணி அனுமதிப்பத்திரங்களாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றது.

இதனடிப்படையில் உருத்திரபுரம் கமநலச்சேவைநிலையக்(ஏ.பி.சி) கட்டடத்தில் வைத்து எதிர்வரும் 9ம்,10ஆம் திகதிகளில் உருத்திரபுரம் வடக்கு கிராம மக்களுடைய தற்காலிக காணி அனுமதிப்பத்திரங்களை நிரந்தர காணி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளும், எதிர்வரும் 13ஆம் திகதியன்று உதயநகர் மேற்கு கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் வைத்து உருத்திரபுரம் கிராம மக்களுடைய தற்காலிக காணி அனுமதிப்பத்திரத்திற்குப் பதில் நிரந்தர காணிஅனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பெறவுள்ளதென கரைச்சிப் பிரதேசச் செயலக காணி உத்தியோகத்தர் செ.ஸ்ரீரங்கநாதன் தெரிவித்துள்ளார். (சோ)

## -வடமராட்சிக் கடற்பரப்பில் -

# வலுக்கூடிய இயந்திரப்படகுகளை பயன்படுத்தப்படையினர் தடை

வடமராட்சிக் கடற்பரப்பில் வலுக்கூடிய இயந்திரப்படகுகளை பாவிப்பதற்குப் படையினர் அனுமதி மறுத்துள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சம்மேளனம் கவலை தெரிவித்துள்ளது.

அண்மைக்காலமாக படையினர் அமுல் படுத்தியுள்ள இந்நடைமுறையின் கீழ் 15 குதிரைவலுவிற்கும் குறைந்த வலுவுள்ள இயந்திரப் படகுகளை பயன்படுத்தியே கடற்றொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட முடியும் என்றும் மாறாக அதிகூடிய குதிரைவலுவுள்ள இயந்திரங்களை பொருத்தி படகோட்டுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் படையினர் எச்சரித்தும் உள்ளனர்.

படையினர் தமது கடல்பிராந்திய பாதுகாப்பு என்பதை காரணம் காட்டி இத்தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளதால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே கடலுக்குச் சென்று தொழிலில் ஈடுபடவேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது.

படையினரின் இந்நடவடிக்கை தொழிலாளர்களின் உரிமைகளை மீறும் ஒருசெயல் என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களின் சம்மேளனம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. (33)


## பேணுகைக்காக நிறுத்தியுள்ள ஊர்தி (பஸ்) உரிமையாளர் கவனத்திற்கு

**எமது கழகத்தில் உறுப்புரிமைபெற்று பயணியர் போக்குவரவுப்பணியில் ஊர்தியினைப் பணியமர்த்தியிருந்த உரிமையாளர்கள் தற்போது அவ் ஊர்தியினைப் பேணு கைக்காக நிறுத்தியிருந்தால் அவ்விபரத்தினை வரும் 15.02.2004 ஆம் நாளிற்கு முன்னர் கழதமாக எமதுபணிமனையில்கையளிக்குமாறு வேண்டுகிறோம்.**

நன்றி.

**சு.மனோகரன் (தலைவர்),**
**தனியார் பேருந்து உரிமையாளர் கழகம்,**
**வன்னி.**

(4204)

## புதுக்கடைத்திறப்பு விழா

# வேணில் நகைமாடம்

தருமபுரம் வேணில் நகைத்தொழிலகம் வேணில் அடைவு பிடிக்கும் நிலையத்திற்குஅருகாமையில் வேணில் நகைமாடம் 05.02.04 அன்று திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர், வாடிக்கையாளர் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு
உரிமையாளர்,
வி.கிருஸ்ணபிள்ளை.

(4207)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கத்தின் முன்னைநாள் தலைவராகவும், தற்போது எமது கரைச்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கத்தின் தலைவராகவும், கிளி/ மாவட்ட கூட்டுறவுச் சபையின் உபதலைவராகவும், கிளிநொச்சி சமுதாய முன்னேற்ற நிலையத்தின் போசகராகவும், கிளி/கிழக்கு புனர்வாழ்வுக் கழகத்தின் உபதலைவராகவும், இராமநாதபுரம் திட்டக்குழு உபதலைவராகவும், இராமநாதபுரம் மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தின் கணக்காய்வாளராகவும், இராமநாதபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கணக்காய்வாளராகவும், இராமநாதபுரம் மாவடி, முருகன் ஆலய கணக்காய்வாளராகவும், இருந்து சமூக சமய பணியாற்றி மக்களின் நன்மதிபபைப்பெற்ற

## திரு. கந்தையா தர்மசூரியர் அவர்களை

யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நீதவான் திருமதி. நந்தசேகரன் அவர்கள் முன்னிலையில் யாழ். நீதி நிர்வாக மாவட்ட சமாதான நீதவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இதனையிட்டு நாம் மகிழ்வடைந்து பல ஆண்டுகள் சமூக சமய பணியாற்றி பொலிவுடன் திகழவேண்டுமென மனதார வாழ்த்துகின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்,

**பணிப்பாளர்கள், பொதுமுகாமையாளர், பணியாளர்கள்.**

(கரைச்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம், வட்டக்கச்சி.)

(சி-9082)

# ஈராக் போரை நியாயப்படுத்தும் நடவடிக்கைகளின் உண்மைத்தன்மையறிய புஷ்சிற்கு நெருக்குதல்!

## -இவ்வாரம் இணக்கத்தை வெளியிடலாம்

(வாஷிங்டன்)

**ஈராக்மீதான போரை நியாயப்படுத்த முன்வைக்கப்பட்ட கருத்துக்களையும் உளவுத்தகவல்களையும் சுயேட்சையாக விசாரணை செய்யப்பட வேண்டும் என்று அதிகரித்துள்ள அரசியல் நெருக்கடிகளுக்கு அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்புஷ் முகம் கொடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.**

ஈராக்கிடம் பேரழிவை உண்டாக்கும் ஆயுதங்கள் இருப்பதாக அமெரிக்காவின் உளவுத்துறை எதனால் நம்பியது? என்பது பற்றியும் ஈராக்மீதான போர் முடிந்துவிட்ட நிலையில் எவைஎவை முன்கூறப்பட்டதில் நிரூபிக்கப்பட்டது? என்பது பற்றியும் புலன் விசாரணை நடத்தப்படவுள்ளது.

இதனால் கூட்டணிப் படைகளின் தலைவர்களான அமெரிக்கா சனாதிபதி புஷ், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரும் கடும் கண்டனங்களுக்கு இலக்காகியுள்ளனர்.

போர் தொடுக்கப்பட்டதற்கான காரணம் சரியாக நிரூபிக்கப் படவில்லை என்று குற்றம் சாட்டப்படுகின்றது.

போர்க்கான முக்கிய காரணமாக கூறப்பட்ட பேரழிவு ஆயுதங்கள் ஈராக்கிடம் இருக்கவில்லை என்று கடந்த வாரம் முன்னாள் தலைமை ஆய்வாளர் டேவிட்கே கூறி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை தெரிந்ததே.

இந்நிலையில் ஈராக் மீதான தாக்குதல்களை நியாயப் படுத்துவதற்காக முன்வைக்கப்பட்ட உளவுத் தகவல்கள் தொடர்பான உண்மைத் தன்மைகளை விபரிப்பதற்காக பக்கச்சார்பற்ற சுதந்திர ஆணைக்குழுவை நியமிப்பது தொடர்பாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் இவ்வார முற்பகுதியில் அறிவிக்கவுள்ளார்எனத் தெரிய வருகிறது.

அமெரிக்க சனாதிபதி ஆணைக்குழு அமைப்பதற்கு முன்னர் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வந்தார்.

எனினும் அமெரிக்க காங்கிரஸிலுள்ள குடியரசுக்கட்சி, சனநாயகக் கட்சியின் அழுத்தங்களே இவ்வாறான தீர்மானம் எடுப்பதற்கு காரணமாகியுள்ளது என்று கூறப்படுகின்றது.

## பதவி விலகல்

(தெஹ்ரான்)

ஈரான் பாராளுமன்றத்தில் சபாநாயகர் உட்பட 117 உறுப்பினர்கள் பதவி விலகியுள்ளார்கள்.

ஈரானில் இந்த மாதம் நடைபெறவுள்ள தேர்தலில் சீர்திருத்தவாதிகள் போட்டியிடுவதற்கு தடைவிதிக்கப் பட்டதை ஆட்சேபித்து இவர்கள் பதவி விலகியுள்ளார்கள்.

# இஸ்ரேலிய தாக்குதலில் 4 பலஸ்தீனர்கள் பலி!

பலஸ்தீனத்தின் தெற்கு காஸாப் பகுதியில் இஸ்லாமிய ஜிகாத் தலைவர் ஒருவர் உட்பட நான்கு பேரை இஸ்ரேலிய இராணுவம் சுட்டுக்கொன்றுள்ளது.

வீட்டைச் சோதனை செய்தபோது இவர்கள் ஒத்துழைக்க மறுத்ததால் சுடவேண்டிய நிலை ஏற்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் கூறியுள்ளது.

# ஈராக் விவகாரங்களை கையாள்வதில் பி.பி.சி.க்கு ரொனிபிளேயர் அழுத்தம்!

## -இயக்குனர் கிறேக் ஷெக் குற்றச்சாட்டு

ஈராக் தொடர்பாக பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் நியாயமற்ற அழுத்தங்களை பி.பி.சி. மீது பிரயோகித்ததாக பி.பி.சி.யின் இயக்குனர் நாயகம் கிறேக்ஷெக் தெரிவித்துள்ளார். பிரித்தானிய அரசுக்குச் சாதக மற்ற செய்திகளை பி.பி.சி. வெளியிடுவது குறித்து கேள்வி எழுப்பியது மூலம் ஊடக சுதந்திரத்தில் ரொனிபிளேயர் அநாவசியமாகத் தலையிடுவதாகவும் கிறேக் கூறியுள்ளார்.

இதேவேளை பி.பி.சி. செய்தி நிறுவனத்திற்கு களங்கம் ஏற்படும் வகையில் அமைந்திருக்கும் ஹட்டனின் அறிக்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றன.



நேற்றுமுன்தினம் சவுதி அரேபியாவில் ஹஜ்யாத்திரையின்போது ஏற்பட்ட நெரிசலில் காயப்பட்ட ஒருவரை கொண்டுசெல்லும் மருத்துவத் தொண்டர்கள்.

## மின் அஞ்சலில் கணினி வைரஸ்!

உலகளாவிய ரீதியில் கணினிகளைத் தாக்கி அழிக்கக் கூடிய புதுவித வைரஸ்தற்போதுபரவி வருகின்றது. என்றும் கணினி பாவனையாளர்கள் இது குறித்து அவதானமாக இருக்க வேண்டுமென்றும் அவசர எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.இந்த வைரஸ் மின் அஞ்சல் மூலம் அனுப்பப்படுவதால் சந்தேகத்திற்கிடமான மின் அஞ்சல்களைத் திறக்க வேண்டாமென்று கணினி நிபுணர்கள் ஆலோசனை வழங்கியுள்ளார்கள்.



ஈராக்கில் நடைபெற்ற தற்கொலை குண்டுத்தாக்குதலில் தமது உறவினர் பலியானதையறிந்த குர்திஷ் பெண் வைத்தியசாலைக்கு முன்பாக புலம்புவதைக் காணலாம்.

# தி.மு.க-காங்கிரஸ் தொகுதிப்பங்கீடு உடன்பாடு நேற்று எட்டப்பட்டது!

(சென்னை)

தமிழகத்தில் எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ்-தி.மு.க. தொகுதிப் பங்கீடு சீராக்கப்பட்டுள்ளது.

தி.மு.க. தலைமையிலான முற்போக்கு சனநாயகக் கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு ஏழு தொகுதிகள் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனைய மூன்று தொகுதிகளும் தற்போது ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு வகைசெய்யும் உடன்பாடு நேற்று சென்னையில் மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

நேற்றைய உடன்பாட்டின்படி காங்கிரஸிற்கு பெரியகுளம், திருநெல்வேலி பகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் இதற்கமைய 10 தொகுதிகளில் போட்டியிடவுள்ளது.



மெக்கா நகரில் ஹஜ் யாத்திரையின் இறுதிநிகழ்வான சாத்தானுக்கு கல் எறிதல் நிகழ்வுக்காக கற்களைப் பொறுக்கும் யாத்திரிகர்கள்.

# நாட்டின் வளர்ச்சிபற்றியே அதிகமாகப் பேசுவோம்

## -பிரதமர் வாஜ்பாய் கூறுகிறார்

(சென்னை)

மக்களவைத் தேர்தல் பிரச்சாரத் தேசிய சனநாயகக் கூட்டணி நாட்டு வளர்ச்சி பற்றித்தான் முக்கியமாகக் கருத்திற்கொண்டு பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுமென்று பிரதமர் வாஜ்பாய் நேற்றுமுன் தினம் கூறியுள்ளார்.திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடையே பேசிய அவர் அயோத்தி போன்ற இதரப்பிரச்சினைகளும் பேசப்படலாம். ஆனால், நாட்டின்வளர்ச்சிபற்றிதான் அதிகமாகப்பேசப்படும்என்று அவர் கூறியுள்ளார்.

## -ஈரான்,லிபியா,வடகொரிய நாடுகளுக்கு-

# அணுவாயுத இரகசியங்களை வழங்கியதாக பாகிஸ்தான் அணுவிஞ்ஞானிகள் ஏற்பு!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் அணுகுண்டின் தந்தை என்று அழைக்கப்படும் அணுவிஞ்ஞானியும் மருத்துவருமான அப்துல்காதிர் கான் உட்பட ஐந்துபேர் தாங்கள் ஈரான், லிபியா, வடகொரியா ஆகிய நாடுகளுக்கு அணுவாயுத ரகசியங்களை தெரிவித்ததாக ஒப்புக்கொண்டுள்ளனர்.

அப்துல்காதிர்கான் இந்த ஒப்புதல் வாக்குமூலத்தை அளித்துள்ளதாக அதிகாரிகள் கூறியுள்ளார்கள்.

1986 - 1993ற்குமிடையே அணுவாயுதம் பற்றிய ரகசியத் தகவல்களை இந்த மூன்று நாடுகளுக்கும் கொடுத்துள்ளதாக, 11பக்க இவர்களது ஒப்புதல் அறிக்கை பாகிஸ்தானிய சனாதிபதி முஷாரப்பிடம் கையளிக்கப்பட்டது என்று அதிகாரிகள் கூறியுள்ளார்கள்.

அணுவாயுதத் தகவல்களை கடத்தியவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் முஷாரப் கூறியுள்ளார் என்று பாகிஸ்தானிய செய்தி ஊடகங்கள் கூறியுள்ளன.

## பறவைக்காய்ச்சலால் மேலும் இருவர் பலி!

பறவைக்காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்ட இருவர் நேற்று தாய்லாந்தில் உயிரிழந்தனர். இதனுடன் பறவைக் காய்ச்சலால் உயிரிழந்தோர் தொகை 12 ஆக உயர்ந்துள்ளது.

உயிரிழந்தவரில் ஒருவர் தலைநகர் பாங்கொக்கிலுள்ள கோழிப்பண்ணையொன்றின் சொந்தக்காரராவார்.

பத்து ஆசிய நாடுகளில் பரவியுள்ள பறவைக் காய்ச்சலால் தாய்லாந்திலும், வியட்நாமிலுமே மனிதர்களுக்கு மனிதர் தாக்கல் தாக்கியுள்ளது எனக் கூறப்படுகிறது.

மேலும், தாய்லாந்தில் மட்டும் இரண்டு கோடி அறுபது இலட்சம் கோழிகள் அழிக்கப்பட்டிருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

# சதாமிடம் பயனுள்ள தகவலை விசாரணையில் பெற்றுள்ளோம்

## - அதிகாரிகள் தகவல்

(வாஷிங்டன்)

சதாம் ஹுசைனிடம் நடந்த விசாரணைகளின் போது தாம் மிகவும் பயனுள்ள தகவல் ஒன்றைப் பெற்றிருப்பதாக அவரிடம் விசாரணை நடத்திய அமெரிக்க புலனாய்வுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் அது என்ன தகவல்? என்பது குறித்துத் தெரிவிக்க அவர்கள் மறுத்துவிட்டனர். தாம் பெற்ற தகவலை உறுதி செய்த பின்னரே அது குறித்து அறிவிப்போம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.


தொடர்ந்து அவரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகிறது. விரைவில் அவர் நீதிமன்றில் வழக்கிற்காக ஆஜர்படுத்தப்படுவார் என்று பென்டகன் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.



தாய்வானில் ஏற்றுமதிக்கு தயாரான வேளையில் வயிறு வெடித்து உட்புறம் சிதைந்து காணப்படும் 56அடி நீளமான திமிங்கலம்.

# விளையாட்டு அரங்கு

# தமிழீழ தேசிய பெருவிளையாட்டு – 03 புதிய திருப்பங்களை ஏற்படுத்துமா?



தமிழர் தாயகத்தின் மூன்றாவது பெருவிளையாட்டுப் போட்டிகள் இம்மாதம் 20ஆம் திகதி கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

கிளிநொச்சி மத்திய மைதானத்தில் இடம்பெற இருக்கும் இப்போட்டி நிகழ்வில், தமிழர் தாயகத்தைச் சேர்ந்த எட்டு மாவட்டங்களும் கலந்து கொள்கின்றன.

இதுவரை நடைபெற்று வந்த போட்டிகளான கேணல் சங்கர் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்கான கிரிக்கெட் போட்டியும், லெப்.கேணல் விக்டர் ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியும், மேஜர் அல்பேட் ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்துக்கான கரப்பந்தாட்டப் போட்டியும், மேஜர் சோதியா ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகளுடன் புதிதாக இம்முறை லெப்.கேணல் புலேந்தி அம்மான் நினைவாக ஆண்கள் கலந்து கொள்ளும் கிளித்தட்டு, லெப்.கேணல் சந்திரன் நினைவாகஆண்கள்கலந்து கொள்ளும் கபடி , கப்டன் திலகா நினைவாக பெண்களுக்கான கபடி போட்டி, லெப்டினன்ட் சதா நினைவாக ஆண்களுக்கான கபடிபோட்டி, கப்டன் அன்பரசி நினைவாக பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியுமாக மொத்தம் ஐந்து போட்டிகள் இம்முறை மேலதிகமாக சேர்க்கப்பட்டு ஒன்பது போட்டிகள் நடைபெறவுள்ளன.

சர்வதேச விதிமுறைகளுக்கமைய நடைபெறவுள்ள இப்போட்டிகளில் 1500க்கு மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் உட்பட பெருமளவானோர் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

நடந்து முடிந்த இரண்டாவது தமிழீழ தேசிய விளையாட்டுப் போட்டியை பார்க்கிலும் இம்முறை நடைபெறும் போட்டியில் ரசிகர்களின் எதிர்பார்ப்பும் அங்கலாய்ப்பும் அதிகரித்



துள்ளது. தமிழீழத்தில் இருந்து கொண்டே ஒரு மாபெரும் தேசிய பெரு விளையாட்டைக்காண மேலும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இது இவ்வாறிருக்க கடந்த முறை நடைபெற்ற போட்டியின் மூலம் தமிழீழத்தில் உள்ள அனைத்து அணிகளும் தம்மையும் ஏனைய அணிகளையும் அவற்றின் தரங்களையும் தரம் பிரித்து அறிந்து கொண்டுள்ள நிலையில் இம்முறை நடைபெறும் போட்டிகள் அணிகளுக்கு ஒரு சிறந்த களத்தை அமைத்துக்கொடுப்பதுடன் பெரும் பரபரப்பையும் ஏற்படுத்தும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

சென்றமுறை உதைபந்தாட்டத்துக்கான கிண்ணத்தையும் துடுப்பாட்டத்துக்கான கிண்ணத்தையும் திருமலை அணியும் கைப்பற்றியிருந்தது. வலைப்பந்தாட்டத்துக்கான கிண்ணத்தையும், கரப்பந்தாட்டத்துக் கான கிண்ணத்தையும் யாழ். மாவட்ட அணியும் கைப்பற்றிக் கொண்டமை தெரிந்ததே. இப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணிகள் உதைபந்து, கரப்பந்து என்பவற்றில் எதிரணிக்கு ஓரளவு எதிர்ப்பை காட்டியிருந்தன.

இந்த நிலையில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட அணிகள் தற்போது இரண்டு வருடமாக நிலவிவரும் அமைதிச் சூழலில் விளையாட்டில் ஓரளவு வினைத்திறனை அதிகரித்துள்ள நிலையில் இம்முறை ஏனைய மாவட்டங்களை தோற்கடித்து புதிய திருப்பு முனைகளை ஏற்படுத்துமா?

உதைபந்தாட்டத்தைப் பொறுத்தவரையில் திருமலை, மன்னார், யாழ்ப்பாணம் அணிகள் உச்சநிலையில் தற்போது திகழ்கின்ற போதும் ஓரளவிற்கு எல்லா அணிகளும் சராசரியாக மோதுமென எதிர்பார்க்கப்படுகிறது. இம்முறை உதைபந்தாட்டப் போட்டிகள் லீக் முறையில் நடைபெறவுள்ளமை அணிகளுக்கு மேலும் உற்சாகத்தை கொடுத்துள்ளன.

துடுப்பாட்டத்தை பொறுத்தமட்டில் மென்பந்து துடுப்பாட்டம் நீக்கப்பட்டு சர்வதேச உபகரணங்களுடனான **Lether boll** போட்டிகள் அறிமுகப்படுத் தப்படுகின்றது. இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அணிகள் குறுகியகால பயிற்சியுடன் களமிறங்கவுள்ளன. ஏனைய மாவட்டங்களுக்கு இப் பின்னடைவு சாதகமாக இருக்கும் என ஊகிக்க முடிகின்றது. ஏனெனில் யாழ்ப்பாணம் உட்பட ஏனைய மாவட்டங்கள் இத்துறையில் அனுபவம் பெற்ற வீரர்களை கொண்டுள்ளது. இருப்பினும் எதிர்பாராத திருப்புமுனைகளை ஏற்படுத்துவார்களோ தெரியாது?

கரப்பந்து



வலைப்பந்தாட்டத்தை எடுத்துக் கொண்டால் யாழ்ப்பாண அணிகளே முன்னிலையில் திகழ்கின்ற போதும் ஏனையவை ஓரளவுக்கு எதிர்த்தாடக்கூடிய தகைமையுடன் இருப்பது கடந்த போட்டிகளைக் கொண்டு ஊகிக்க முடிகின்றது.

இது இவ்வாறிருக்க இம்முறை புதிதாக மேலும் ஐந்து போட்டிகள் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் யார் எந்தக் கிண்ணத்தை சுவீகரிக்க போகின்றார்கள் என்பதை உறுதியாகக் கூறமுடியாத நிலையே உள்ளது.

**ஜெயந்திரன்**

# அக்ரமின் தடைநீங்கியது!

பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரும் தலை சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவருமான வசீம் அக்ரம் இந்திய வீரர்களுக்கு பயிற்சி அளிக்கலாம் என பாகிஸ்தான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுள்ள வசீம் அக்ரம் தற்போது தொலைக்காட்சி வர்ணனையாளராக பணியாற்றி வருகின்றார்.

இதற்கிடையே கடந்த ஆண்டு வசீம் அக்ரம் இந்திய பந்து வீச்சாளர்களுக்கு பயிற்சி அளிக்க இருப்பதாக கூறப்பட்டு செப்ரெம்பர் மாதம் அவருக்கு எதிராக வழக்கும் தொடரப்பட்டது. இதனால் மிகவும் மனவருத்தத்திற்கு உள்ளான அக்ரம் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்பார்த்திருந்தார். அந்த மனுவில் வசீம் அக்ரம் திறமையானவர் இந்திய வீரர்களுக்கு அவர் பயிற்சி அளிப்பதை நிறுத்த வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. இதனை பாகிஸ்தானின் முன்னாள் வீரர்களும் ஏற்றுக்கொண்டிருந்தனர்.

இந்த மனுவை கடந்த சனியன்று பாகிஸ்தான் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. வசீம் அக்ரம் சர்வதேச அளவில் பேசப்படும் ஒரு சிறந்த வீரர் இது மாதிரி வழக்குத் தொடர்வது தேவையற்றது. அவர் இந்திய வீரர்களுக்கு பயிற்சி அளிக்கலாம் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதுடன் வழக்குத் தொடர்ந்த அப்பாஸ் என்பவருக்கு 15000 ரூபா அபராதமும் விதித்துள்ளது. இதனால் ஆடிப்போயுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் நிர்வாகம் வசீம் அக்ரம் இந்திய வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதை தடுப்பதற்கு மும்முரமாக செயற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க இந்திய அணியின் பந்து வீச்சு பயிற்சியாளராக புரூஸ்றீட் நியமிக்கப்பட்டுள்ளார்.

# இந்திய கிரிக்கெட் அணியின் எதிர்காலம்...?

கடந்த ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் இறுதிப்போட்டிவரை சென்று ஏமாற்றம் அடைந்த இந்திய கிரிக்கெட் அணி, அதனைத் தொடர்ந்து 8மாத ஓய்வின் பின்னர் தொடர்ந்து போட்டிகளில் கலந்து கொண்டுள்ளது.

அவ்வணி உலகின் மிகப் பிரபல்யம் வாய்ந்த அவுஸ்திரேலிய அணியுடனேயே இரு போட்டித்தொடர்களில் ஆடி வருகிறது. இதுகாறும் இவ்விரு தொடர்களிலும் இந்தியா அவுஸ்திரேலியாவுடன் விளையாடி வந்தாலும் அது இன்னும் அவுஸ்திரேலியா அணியிடம் கற்றுக் கொள்ளவில்லை என்றே கூறலாம். அவுஸ்திரேலிய அணி முதலில் களமிறங்கினாலும் இரண்டாவதாகக் களமிறங்கினாலும் பெரும்பாலும் வெற்றியுடனேயே பெவிலியன் திரும்புகிறது. அவ்வணி போட்டியின் இலக்கை இலட்சியத்துடன் அணுகுகிறது. எதிரணி பாரிய ஓட்ட எண்ணிக்கையை வெற்றி இலக்காக நிர்ணயித்தாலும் அணியின் கடைசி வீரர்வரை அந்த இலக்கை நிதானமாகவும் பொறுப்பாகவும் கடந்து வெற்றி பெறுகின்றனர்.

அன்றியும் தமது அணி சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தாலும் அவ்விலக்கை எதிரணி எட்டிவிடாமல் துல்லியமாகவும் நிதானமாகவும் பந்து வீசியும் தகுந்த வியூக மமைத்து களத்தடுப்பு செய்தும் வெற்றி பெறு கின்றனர். எனவே இந்த அணியுடன் தொடர்ந்து 3 மாதங்களாக ஆடிவரும் இந்திய அணி அவர்களிடமிருந்து பாடம் கற்றுக் கொள்ளவில்லை. காரணம்நேற்று முன்தினம் இந்திய அணி அவுஸ்ரேலியாவுடன் ஆடிய வீ.பி. கிண்ணத்தொடரின் கடைசி லீக் போட்டியில் ஆடிய நட்சத்திர வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததும் முதல் 15 ஓவர்களில் அவுஸ்திரேலிய அணி பெற்ற ஓட்ட விகிதமும் மேற் சொன்ன கூற்றை தெளிவுபடுத்துகின்றன. ஆஸிஅணியில் உள்ள பந்து வீச்சாளர்களுக்கு இந்திய அணி பந்து வீச்சாளர்கள் சளைத்தவர்களல்ல. ஆயினும் கடைசி வீரர் வரை நிதானமாக அவ்வணி ஆடும் போது இந்திய அணியினருக்கு ஏன் முடிவதில்லை என்ற கேள்வி எழுகிறது. ஆகவே இந்தத் தொடரில் கிண்ணத்தைக் கைப்பற்ற முடியாவிட்டாலும் அவுஸ்திரேலியா அணியின் ஆற்றலையும் உபாயங்களையும் இந்திய அணி கைக்கொள்வது அவசியம். மேலும் இந்திய அணியின் பலவீனத்தை நிரூபிக்கும் வகையில் மூன்றாவது அணியான சிம்பாவ்வே அணியின் களத்தடுப்பும் பந்து வீச்சும் அமைந்திருந்தன. இந்தியாவுடன் கடந்த 24 ம் திகதி



அடிலேய்டில் நடைபெற்ற போட்டியில் பங்கு பற்றிய சிம்பாவ்வே அணி 4ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டங்களை மட்டும் கொடுத்து கங்குலி உட்பட மூன்று வீரர்களை பெவிலியனுக்கு அனுப்பியதை கூட இந்திய அணியினர் மறந்து போயுள்ளனர். சிம்பாவ்வே அணி அவுஸ்திரேலியாவின் ஓட்ட வீதத்தைக்கூட கட்டுப்படுத்தியது என்றால் அது மிகையாகாது. எனவே இதிலிருந்தும் இந்திய அணியின் களத்தடுப்புமுறை தெளிவாகிறது. எனவே எதிரணி வீரர்களை ஆட்டமிழக்கச்செய்ய முடியாது போயினும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளில் ஓட்டங்களை குறைப்பதற்கு இந்திய அணியினர் முயற்சி எடுப்பது நன்று. அவுஸ்திரேலிய வீரர்களே சில வேளைகளில் பாராட்டும்படி இந்திய அணி ஆடும் போது அது கவனமின்மையாலும் ஏனோதானோ என்று ஆடுவதாலும் எதிர் வரும் பாகிஸ்தானுக்கான சுற்றுப் போட்டியும் அவ்வணிக்கு நெருக்கடிமிக்கதாகவே இருக்கும்.

**வடிவேல்**

# “மில்லேனியம் சிற்றி” தேடுதல் விவகாரம் —
# படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள்...

02-01-2002 அன்று கொழும்பு அத்துரு கிரிய என்னும் இடத்தில் அமைந்துள்ள “மில்லேனியம் சிற்றி” குடியிருப்புப்பகுதியில் சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவரின் வீட்டில் பொலிசாரும் இராணுவப் பொலிசாரும் இணைந்து நடத்திய தேடுதலில் அங்கு கண்டு பிடிக்கப்பட்ட ஆயுதக் களஞ்சியமும் தொடர்ந்து இடம்பெற்ற விசாரணையில் வெளியாகிய தகவல்களும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன.

சிறிலங்காப் பிரதமர் மீது தாக்குதல் நடத்தும் திட்டத்துடன் அங்கு பதுங்கியிருந்த குழுவொன்றை கைது செய்துள்ளதாக ஆரம்பத்தில் தகவல்கள் வெளியாகின. பின்னர் இவ்வீடு, ஆயுதங்கள் குறித்து வெளியான தகவல்கள் தேடுதல் நடத்தியவர்களைத் தேசத்துரோகிகள் எனக்குற்றம் சாட்டுமளவுக்குக்கொண்டு சென்றது.

இப்பொழுது இரண்டு வருடங்களின் பின் இவ்விவகாரம் சில இராணுவ அதிகாரிகள் பொலிஸ் அதிகாரி ஒருவர் என்போருக்குத் தண்டனை பெற்றுக்கொடுத்ததுடன் மேலும் சில பொலிஸ் அதிகாரிகள் மீது மட்டுமல்ல பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது தேசத்துரோகக்குற்றச்சாட்டை சுமத்துமளவுக்கு சென்றிருந்தது.

02-01-2002 அன்று கண்டி மாவட்ட பொலிஸ்அத்தியட்சகர் குலசிறி உடுகம் பொலவுக்கு (அவர் முன்னர் பொலிஸ் மோப்ப நாய் பிரிவுக்கு அதிகாரியாக இருந்தவர்.) தெல்தெனிய நீதிமன்றத்தில் இருந்தபோது ஒரு கையடக்கத்தொலைபேசி அழைப்பு கிடைத்தது.

அதில் உடத்தலவினவில் முஸ்லிம்கள் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் அத்துரு கிரிய மில்லே னியம் சிற்றியில் அமைந்துள்ள வீடொன்றிற்கு வந்துபோயிருந்தார் எனவும் இந்த வீடு இராணுவக்கப்டன் ஒருவருக்கு உரிமையானது இந்த வீடு சந்தேகத்துக்கு உரியதாக இருக்கிறது எனவும் தகவல் வழங்கப்பட்டது. இவ்வாறு அங்கு சென்ற சந்தேக நபர் யாரெனில் முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் மகன் சானுக்க ரத்வத்தவாகும்.

இந்தத் தொலைபேசி அழைப்பில் வீட்டு இலக்கம் வரை தெளிவாக அனைத்து தகவல்களும் வழங்கப்பட்டிருந்தன. உடனடியாக இந்த வீட்டைச்சோதனையிடுவதற்கான அனுமதியை தெல்தெனிய நீதவானிடம் பெற்றுக்கொண்ட குலசிறி உடுகம்பொல ஐந்து பேர் கொண்ட பொலிஸ் குழுவுடன் கொழும்புக்கு விரைந்தார்.

அங்கு நாரெஹென்பிட்டியிலுள்ள இராணுவப்பொலிஸ் தலைமையகத் திற்குச்சென்று மேஜர் ஒருவரின் உதவிபெற்று அவ்வீட்டைச் சோதனையிட்டார். இந்த வீட்டில் இருந்தவர்களில் இருவர் தமிழர்கள் இருவர் முஸ்லிம்கள், ஒருவர் சிங்களவர் என அப்போது தெரிவிக்கப்பட்டது.

வீட்டைச் சோதனையிட்டபொலிசார் இராணுவ ஆயுதங்களின் விபரம் அடங்கிய ஆவணம் ஒன்றைக் கைப்பற்றினர். இதனையடுத்து பூட்டியிருந்த அறையொன்றைச் சோதனையிட முயன்றபோது அதன் திறப்பு இராணுவக்கப்டனிடம் இருப்பதாககூறப்பட்டது. இருமணி நேரத்தில் அவ்வீட்டுக்கு வந்த குறித்த இராணுவக் கப்டனை பொலிசார் விசாரித்தபோது,

“இங்கு ஏன் வந்தீர்கள்?” என பொலிசாரைக் கேள்வி கேட்டு மிரட்டியுள்ளார்.

ஆனால் பொலிசாரின் வற்புறுத்தலையடுத்து அந்த அறையை இராணுவக் கப்டன் திறந்து காட்டிய போது அந்த அறையில் பெருமளவான ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதனையடுத்து பயங்கர வாதத் தடைச்சட்டத்தின் கீழ் இவர்களைக்கைது செய்த பொலிசார் அவர்களை முதலில் கொழும்பில் ஒரு இடத்திற்கும் பின்னர் கண்டிக்கும் கொண்டு சென்றனர். முதலில் அரசாங்கம் வெளியிட்ட தகவலின் படி 2001 நவம்பரிலேயே (தேர்தலுக்கு முன்) இந்த வீட்டிற்கு ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டதாகவும் ரணில் விக்கிரமசிங்கவை கொலை செய்யும் நோக்குடனேயே இவை களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

10-11-2001 இல் ஐக்கிய தேசிய முன்னணித்தவிசாளர் சரித்தரத்வத்த, உபதலைவர் தயாபெல்பொல ஆகியோர் இராணுவத்தளபதிக்கு முறைப்பாடொன்றைச் செய்திருந்தனர். அதாவது வடபகுதியிலிருந்து “தேமோபரிக்” எனும் வெடிப்பொருட்களுடன் தமிழ்க்குழு ஒன்றின் சில உறுப்பினர்களை பன்னலுவ இராணுவப் பயிற்சிப்பகுதிக்கு சிறிலங்கா இராணுப்புலனாய்வுப்பிரிவினர் விமானம் மூலம் அழைத்து வந்ததாகவும் அவர்களுக்கு பெரும் அழிவை ஏற்படுத்தும் மேற்படி ஆயுதங்களைப்பயன்படுத்துவதற்கான பயிற்சி வழங்கப்பட்டதாகவும் இவர்களை தமது தலைவர்கள் பயணிக்கும் வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பயன்படுத்தப்போவதாகவும் குற்றம் சுமத்தினர்.

ஆனால் இராணுவத்தளபதி லயனல் பலகல்ல இதனை முற்றாக மறுத்திருந்தார். ஆனால் மில்லேனியம் சிற்றியில் கைது செய்யப்பட்டோர்இவர்களே என அரசாங்கம் வலியுறுத்தியது.

ஆனால் பின்னர் நடத்திய விசாரணைகள் இவர்கள் இராணுவத்தைச்சேர்ந்த “பிசாசுப்படையினர்” எனவும் இவர்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்தது.

“நீண்ட தூர வீச்சுவேக ரோந்து அணியை” சேர்ந்த இவர்கள், இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்துபவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. இவர்களிட மிருந்த ஆயுதங்களுக்கு இராணுவப் புலனாய்வுப் பணியக பணிப்பாளர் பொறுப் பேற்றுக் கொண்டார். பின்னர் நடைபெற்ற விசாரணைகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பயன்மிக்க ஒரு படை அணியின் இரகசியம் வெளிப்படுத்தப்பட்டதாகவும் தேசத்துரோகம் புரியப்பட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சும், சனாதிபதியும் தனித்தனியாக விசாரணை நடத்தியதுடன் அறிக்கைகளை வெளியிட்டன. அத்துடன் இச்சம்பவத்தில் கைதான இராணுவத்தினர் தம்மைக் கைது செய்து வசதிகளெதுவும் சிறைகளில் அடைத்து வைத்தது சட்டவிரோதம் எனவும், மனித உரிமை மீறல் எனவும் தாக்கல் செய்த வழக்கு தீர்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவ் விவகாரம் தொடர்பாக சில இராணுவ அதிகாரிகளுக்கு சிறிலங்கா சனாதிபதியும் முப்படைகளின் தளபதியுமான சந்திரிகா தண்டனை வழங்கியுள்ளார்.

சனாதிபதி நியமித்த இது தொடர்பான ஆணைக்குழு பிரதமர் உட்பட பலர் மீது தேசத்துரோக குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது. ஆனால் இந்தஆணைக் குழுவின் அறிக்கை குறித்து ஆராயக் குழுவொன்றை நியமிக்க அரசாங்கம் பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவெற்றியுள்ளது.

இதனிடையே இத் தேடுதலுக்கு ஒத்துழைத்ததாக குற்றம் சாட்டி மூன்று சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளை சந்திரிகா குமாரதுங்க கட்டாய ஒய்வில் அனுப்பியுள்ளார். இவர்களில் அப்பொழுது இராணுவத் தளபாடங்களுக்கு பொறுப்பாக இருந்த மேஜர் ஜெனரல் ஐவன் திஸாநாயக்கவும் ஒருவராவார். அத்துடன் அத்துருகிரியவில் தேடுதல் நடத்திய குலசிறி உடுகம் பொலவின் சகோதரரான கேணல் பத்மஸ்ரீ உடுகம்பொலவுக்கு பதவியுயர்வுகள். மறுக்கப்பட்டிருக்கிறது. இவர் விசாரணைகளுக்கு ஒத்துழைக்க மறுத்தார்.என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மேலும் ஒரு கோப்ரலும் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை இத்தேடுதலுடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக பொலிஸ்மா அதிபர் ஆராய்ந்து வருகிறார். இவை எல்லாம் சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்கு இணங்கவே மேற்கொள் எப்பட்டு வருகின்றது.இது ஒரு புறமிருக்க அத்துருகிரிய சம்பவத்தில் கைது செய்யப்பட்ட இராணுவத்தினர் தாக்கல் செய்த மனித உரிமைகள் மீறல் வழக்கின் அடிப்படையில் பொலிஸ் அதிகாரி குலசிறி உடுகம்பொல இராணுவத்தினருக்கு நட்ட ஈடு வழங்க வேண்டும் எனத் தீர்ப்பளித்திருக்கிறது.

இவ்விவகாரம் இத்துடன் முடிந்து விடாது என்பது உறுதி. ஏனெனில் தேர்தல் நெருங்குகின்றமையால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் எதிரான பிரச்சாரத்துக்கு எதிரணியினர் இதனைப் பயன்படுத்துவர் அத்துடன் சிஹல உறுமைய, தேசப் பற்றாளர் முன்னணி என்பனவும் இதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

இவ்விடயத்திலே குற்றம் சாட்டப்பட்ட முக்கிய நபர் ஒருவர் மீது சனாதிபதி சந்திரிகா நடவடிக்கை எடுக்கவில்லை. அவர் இராணுவத்தளபதி லயனல் பல கல்லவே ஆவார். அத்துருகிரிய வீட்டைச் சோதனையிடுவதற்கு பொலிசார் இராணுவத்தினரின் உதவியைப் பெற்றிருக்கின்றமையால் இராணுவத் தளபதி செயற்திறன் மிக்கவராக இருப்பின் அதனைத் தடுத்து விபரம் வெளிவராது தடுத்திருக்கலாம் என இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

ஆனால் சம்பவ வேளை இவர் அப்போதைய இராணுவத்தலைமை அதிகாரி நீல்டயசை ஓய்வு பெறச்செய்வதில் ஈடுபட்டிருந்தார் என குற்றம் சாட்டப்படுகிறது.

ஆனால் இவர் மீது சந்திரிகா நடவடிக்கை எடுக்காதது மட்டுமல்ல பதவி நீடிப்பு வழங்கியிருக்கின்றமை கவனிக்கத் தக்கதாகும். எவ்வாறாயினும் சில இராணுவ அதிகாரிகளையும் அனுருத்த ரத்வத்த குடும்பத்தை சிறையில் தள்ளிய பொலிஸ் அதிகாரிகளையும் எதிரணியினரையும் பழி வாங்க இச்சம்பவம் பயன்படுத்தப்படும் என்பது வெளிப்படை.

**வேலவன்**

---

## நீர்க் குழாய் இணைத்தல் பயிற்சி நெறி ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

உலக கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் (டபிள்யூ. யு. எஸ்.சி.) நிதி உதவியுடன் கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தால் நீர் குழாய் இணைத்தல் பயிற்சிநெறி உருத்திரபுரம் பகுதி காந்தி நிலைய வளாகத்தில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வு நிறுவனத் தலைவர் ஏ.வி.கே மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. மங்கல விளக்கினை டபிள்யூ. யு. எஸ். சி. பிரதி வெளிக்களப் பணிப்பாளர் ஜெயராஜசிங்கமும், த.பு.கழக சிறுவர் நலத்திட்ட உத்தியோகத்தர் கணேந்திரனும் ஏற்றி வைத்தனர்.

இந் நிகழ்வில் இருபது பயிற்சியாளர்களும் பங்கு பற்றினர். டபிள்யூ.யு.எஸ்.சி. நிறுவன தி.ஜெயராஜசிங்கம், சத்தியசீலன், நிடோ நிறுவன இணைப்பாளர் ஜெயசீலன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். (கோ)

## மக்கள் சந்திப்பு

(முழங்காவில்)

முழங்காவில் பிரதேசத்தில் காவல்பணிமனையினரால் கிராம ரீதியாகவும் பாடசாலை ரீதியாகவும் மக்கள் மத்தில் குற்றத்தடுப்பு போக்கு வரத்து விதிமுறைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது. முழங்காவில் பிரதேச காவல்பணிமனைப் பொறுப்பாளர் தா.வதனகுமார் தலைமையில் நேற்று முன்தினம் இளநிலா குடியிருப்பில் மக்கள் சந்திப்பு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்தும் மக்கள் சந்திப்புகள் இடம்பெறவுள்ளன.

## 2003-ல் கிராமிய அபிவிருத்தி வங்கி 1,639 பயனாளிகளுக்கு கடனுதவி!

கிராமிய அபிவிருத்தி வங்கி கடந்த ஆண்டு மட்டும்1639 பயனாளிகளுக்கு சுமார் 2 கோடி 56 இலட்சத்து 95 ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தேழு ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயக் கடனாக 757 பயனாளிகளுக்கு ரூபா தொண்ணூற்று ஏழு இலட்சத்து 18ஆயிரத்து எழுநூற்றுப் பதினைந்தும், சுய தொழில் கடனாக 141பயனாளிகளுக்கு ரூபா 45 இலட்சத்து 77ஆயிரத்து 500உடன், முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாயக் கடனாக 288 பயனாளிகளுக்கு 50இலட்சத்து 56ஆயிரமும், சுயதொழில் கடனாக 136பயனாளிகளுக்கு8இலட்சத்து 59 ஆயிரம் ரூபாவும், வவுனியா மாவட்டத்தில் விவசாயக் கடனாக 110 பயனாளிகளுக்கு 10 இலட்சத்து 26ஆயிரத்து 539ரூபாவும், சுய தொழில்கடனாக 53 பயனாளிகளுக்கு 23 இலட்சத்து 9ஆயிரத்து 123 ரூபாவும், மன்னார் மாவட்டத்தில் விவசாயக்கடனாக 83 பயனாளிகளுக்கு 8இலட்சத்து 18ஆயிரம் ரூபாவும், சுயதொழில் கடனாக 37பயனாளிகளுக்கு 8 இலட்சத்து 46 ஆயிரத்து 700 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளதுடன், வங்கியின் மத்திய செயலகத்தால் 32 பயனாளிகளுக்கு சுயதொழில் கடனாக 4இலட்சத்து 90ஆயிரத்து 400ரூபாவும் வழங்கப்பட்டுள்ளதாக வங்கியின் பொது மேலாளர் தெரிவித்துள்ளார்.

## கடந்த வருடம் 4097 குடும்பங்கள் வவுனியாவில் மீள்குடியமர்வு

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஆண்டு 4097 குடும்பங்கள்மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளதாக திட்டமிடும் பணிப்பாளர் திருமதி தேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். 2003 சனவரி முதல் டிசம்பர் வரை 4350 குடும்பங்கள் மீளக்குடியமர விண்ணப்பம் சமர்ப்பித்ததாகவும் இவர்களில் 4097 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில்-1313 குடும்பங்களைச் சேர்ந்த-5133பேரும், செட்டிகுள பிரதேச செயலாளர் பிரிவில்-369-குடும்பங்களைச் சேர்ந்த-1396 பேரும், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில்-2067- குடும்பங்களைச் சேர்ந்த-8054-பேரும், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில்-348- குடும்பங்களைச் சேர்ந்த-1250- பேருமாக கடந்த ஆண்டு மொத்தமாக 4094 குடும்பங்களைச் சேர்ந்த 15833பேர் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (21)

# பாரம்பரிய கலைகள் சிதைந்துவிடாமல் காத்த எம் மக்கள் பெருமைக்குரியவர்கள்



## -அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன்

(அலுவலக செய்தியாளர்)

**போரினால் சிதைந்து போயுள்ள எமது தேசத்தில் போரின் வடுக்களை ஒருதோளிலும் பொருளாதாரத்தின் வடுக்களை ஒருதோளிலும் சுமந்து வாழ்ந்த எங்களுடைய மக்களே கலையின் வடிவத்தை சிதைந்திடாமல் காத்த பெருமைக்குரியவர்கள். இவ்வாறு தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.**

முல்லை. மாவட்ட நுண்கலைக் கல்லூரியின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து சிறப்புரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது தேசத்தின் கலையை அழியாது கட்டிவளர்க்கவேண்டும் என்கின்ற எமது தேசியத்தலைவரின் எண்ணத்திற்கமைவாக நுண்கலை கல்லூரிஎழுந்துநிற்கிறது இந்தக் கல்லூரிகலையை கட்டிவளர்க்க வேண்டும் என்ற தேசியத்தலைவரின் நீண்ட இலக்கினை நிவர்த்தி செய்யும் வகையில் செயற்பட்டு வருகிறது.

எமது தேசத்தை அழிக்கும் நோக்கில் எதிரி பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்ற அதேவேளை எமது தாயகத்தின் கலைப்பாரம்பரியங்களை சிதைப்பதற்காகவும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றான் அவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளிவைத்து எமது கலை பாரம் பரியங்களை கட்டி வளர்ப்பதற்காக இந்த நுண்கலைக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன. அந்த வகையில் இவற்றின் செயற்பாடுகள் மிகவும் முன்னேற்றகரமாக வளர்ந்து வருகின்றன.

போர்க்காலத்தில் சிதைந்து போயிருந்த எமது கலைகளையும் கலைஞர்களையும் ஒன்று சேர்த்து கலையை வளர்த்தெடுக்க இந்த கல்லூரி ஆற்றுகின்றபணி அளப்பரியது.

இன்று போர்ஓய்ந்து ஒரு சிறு அமைதி தோன்றியுள்ளது. இந்த அமைதியை நாம் அனைவரும் எமது தேசத்தின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தவேண்டும்.

இந்த ஓய்வு எமது இனத்தின் விடுதலைக்கான ஓய்வாக அமைய வேண்டும் என்பதே எமது விருப்பு. ஆனாலும் சிங்கள பேரினவாத கட்சிகள் இந்த ஓய்வை தமக்கு சாதகமாக பயன்படுத்தவே முயன்று கொண்டிருக்கிறார்கள். கடந்த காலங்களில் எமக்கு கிடைத்த ஓய்வுகளை விட இம் முறை எமக்கு கிடைத்த ஓய்வு எமது போராட்டத்தின் உண்மைத் தன்மையை எமது மக்களினதும் போராளிகளினதும் உயிர்த்தியாகங்களையும் உலகுக்கு எடுத்துக்கூறி எமது போராட்டம் நியாயமானது என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளது.

இன்று இங்கு ஏற்பட்டுள்ள போருக்கு யார் காரணம். போரை எமது இனத்தின்மீது திணித்தவர்கள் யார்?போரின்வடிவங்களுக்கு முகம் கொடுத்தவர்கள் யார்? என்ற உண்மைகளை சர்வதேச உலகத்துக்கு தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறோம். சர்வதேச சமூகமும் விடுதலைப்போரின் உண்மையைப் புரிந்து கொண்டிருக்கிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ)

# மழையின்றி நெற் பயிரழிவு

(முள்ளியவளை)

முல்லைத்தீவு பகுதியில் நீர்ப்பாசனம் அற்ற பெருந்தொகையான ஏக்கர் நெற்பயிர்ச்செய்கை மழையின்றி கருகிஅழிந்து போகின்றது.

முல்லைத்தீவு பகுதியிலும் 3ஆம் கட்டைப்பகுதி சிலாவத்தை பகுதிகளில் சுமார் 70ஏக்கருக்கு மேலான நெற்செய்கை மழையின்றி பயன்கிடைக்கும் பருவத்தில் கருகிஅழிவுக்குள்ளாகி வருவதை அவதானிக்க முடிகின்றது.

கடந்தாண்டுபருவமழை எதிர்பார்த்ததைவிடமிகக்குறைவாக பெய்ததினால் மேற்படி நெற் செய்கை அழிந்து போகின்றது.(ஆ)

## – வடக்கு – கிழக்கு மாகாண தமிழ்மொழி மூல –

# கையெழுத்துச் சஞ்சிகைப்போட்டி கருப் பொருள் அறிவிப்பு

2004ஆம் ஆண்டுக்கான வடக்கு கிழக்கு மாகாண தமிழ்மொழி மூலப் பாடசாலைகளுக்கு இடையேயான கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி 'நிரந்தர சமாதானத்தின் மூலம் சுபீட்சமான வாழ்வைப் பெறுவோம்.' என்ற கருப்பொருளை மையமாக வைத்து நடத்தப்படும் என்று மாகாணக் கல்விப்பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் சகல வலயக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி உதவிப்பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

மாணவரிடையே ஆக்க இலக்கிய எழுத்தாற்றலையும் சித்திர, சிற்பத்திறன் விருத்தியையும், குழுமுறைக்கற்றல், தொடர்பாடல் ஆர்வங்களையும் வளர்ப்பதே கையெழுத்துச் சஞ்சிகை ஆக்கப்போட்டியின் பிரதான நோக்கமாகும் என்றும் மாகாணக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி நான்கு பிரிவுகளாக நடைபெறும் பாலர் மேற்பிரிவு, இடைநிலைப்பிரிவுI இடைநிலைப்பிரிவுII, இடைநிலைப்பிரிவுIII, கல்லூரி நிலைப்பிரிவு ஆகிய நான்கு பிரிவுகளாக அமையும். கையெழுத்துச் சஞ்சிகைகளில் இடம்பெறும் ஆக்கங்கள் புதியனவாகவும் சுயமானதாகவும் இருக்க வேண்டும் என்றும் பணிப்பாளர் மகாலிங்கம் தெரிவித்துள்ளார். பாடசாலை மட்டப் போட்டிகளின் முடிவுத்திகதி ஏப்ரல் 30என்றும் கோட்டமட்டப் போட்டி முடிவு மே31 என்றும் வலய மட்டத்தின் முடிவு ஜூன்30 என்றும் மாகாண மட்டத்தின் முடிவு ஜூலை31 என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவின் முதல் மூன்று இடங்களைப்பெறும் சஞ்சிகைகளுக்கு தலா 3500ரூபா, 2500ரூபா, 1500ரூபா பணப்பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

## -யாழ். இல் கடந்த ஆண்டில்-

# கசிப்பு வைத்திருந்த குற்றத்திற்காக 3500 பேருக்கு அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் கசிப்பு உற்பத்தி அதிகரித்து வருவதால் சமூக சீர்கேடுகளும், வன்முறை சம்பவங்களும் அதிகரித்து வருவதாகத் தெரியவந்துள்ளது.

1945 ஆம் ஆண்டு படையினர் யாழ்.குடாநாட்டை ஆக்கிரமித்த பின்னர் இத்தகைய கசிப்பு உற்பத்திகளும், விற்பனைகளும் அவற்றை பாவனை செய்வோர் தொகையும் அதிகரித்துள்ளது. அந்த வகையில் கடந்த ஆண்டு 3ஆயிரத்து 500க்கு மேற்பட்டோர் கோடா, கசிப்பு வைத்திருந்த குற்றத்திற்காக நீதி மன்றங்களில் அபராதம் விதிக்கப்பட்டதாக சிறிலங்கா பொலிசார் தெரிவிக்கின்றனர்.

எனினும் இவ்வாறு அதிகரித்துள்ள கசிப்பு பாவனைகள், கசிப்பு உற்பத்திகளைத் தடுக்கும் முயற்சிகளில் பொலிசாருக்கு கிடைத்துள்ள தோல்வியே என பல்வேறு சமூக அமைப்புக்களும் சுட்டிக் காட்டுகின்றன.

இதேவேளை இக் கசிப்பு உற்பத்திகளை சில பின்தங்கிய இடங்களில் ஊக்குவிக்கும் விதத்தில் பொலிசாரும் சில தேச விரோதக் குழுக்களும் ஈடுபட்டு வருவதாக மக்கள்குற்றம்சாட்டுகின்றனர். (33)

# யாழ். சுப்பிரமணியம் பூங்காவை புனரமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் உள்ள சுப்பிரமணியம் பூங்காவை புனரமைக்கும் நடவடிக்கைகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ். மாவட்டத்தை சேர்ந்தவரான உலகபுகழ் பெற்றவைத்திய நிபுணரான சுப்பிரமணியம் நினைவாக யாழ்.பொது நூலகம் முன்பாக அமைக்கப்பட்டிருந்த மேற்படி பூங்கா கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்புக்களால் சிதைத்து தரைமட்டமாக்கப்பட்டது.

பின்னர் அதனை புனரமைத்து வளப்படுத்த யாழ். மாநகரசபை மற்றும் ஏனைய உதவும் சர்வதேச நிறுவனங்கள் முன்வந்தன ஆனால் யாழ்.கோட்டையையும் அதனை அண்டிய பகுதிகளிலும் நிலைகொண்டுள்ள படையினரின் பாதுகாப்பினை காரணம் காட்டிஅதனை புனரமைக்க படையினர் தடைவிதித்தனர். இதனால் கைவிடப்பட்ட இப்பூங்காவின் புனரமைப்பு பணிகள் தற்போது யுனிசெவ் நிறுவனத்தின் நிதி உதவியுடன் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (33)

# விசுவமடு-பிரமந்தனாறு வீதி சீர்கேட்டால் பெரும் சிரமம்

விசுவமடு- பிரமந்தனாறு வீதி மக்கள் போக்குவரத்து செய்ய முடியாது பெரும் குன்றும் குழியுமாக மாறியுள்ளதுடன் வீதியின் இருமருங்குகளும் பற்றைகளால் மூடப்பட்டு வருகிறது. இவ்வீதி கடந்த பலவருடங்களாக திருத்த வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படாததால் போக்குவரத்து செய்ய முடியாது மிகவும் மோசமான நிலையடைந்துள்ளது.

விசுவமடுவில் இருந்து புன்னைநீராவிக்கு செல்லும் மக்கள் பிரமந்தனாறு படித்தவாலிபர் திட்டத்தில் உள்ள பெருமளவு மக்கள் மயில்வாகனபுரம், கண்ணகிநகர் போன்ற கிராமங்களுக்கு செல்லும் மக்களும் இப்பாதை வழியாகவே பயணிக்கின்றனர். அத்துடன் இப்பகுதியில் உள்ள பிரமந்தனாறு.ம.வி,மயில்வாகனபுரம் அ.த.க.பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள் என அனைவருமே பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். இப்பாதையில் இரவு வேளைகளில் பலர் துவிச்சக்கரவண்டிகள் ஓடமுடியாது உருட்டி செல்கின்றனர். அத்துடன் இக்கிராமங்களில் உள்ள மக்கள் பெரும்பாலானோர் விவசாயிகளாக உள்ளதால் தமது விளைபொருட்களை கூட விசுவமடு சந்தைக்கு எடுத்து செல்வதிலும் கஸ்ரங்களுக்குள்ளாகி வருகின்றனர். (14)


# முக்கிய அறிவித்தல்

## மணல் அகழ்வு - கரைச்சிப்பிரதேச சபைப்பிரிவு

மணல் அகழ்வு சம்பந்தமாக பின்வரும் இடங்களில்மாத்திரம் மணல் அகழ்வு செய்து கொள்ள முடியும் என்பதனை தெரிவித்துக்கொள்கிறேன்.

**01. பன்னங்கண்டி ஆற்றுப்பகுதி**
**02.கண்ணகைபுரம் பேராற்றுப்பகுதி**
**03.குடமுருட்டி பேராற்றுப்பகுதி**

இவ்விடங்களில் மணல் அகழ்ந்து ஏற்றுவதற்கு முன்பு கரைச்சிப்பிரதேசசபைக்கு உரிய கட்டணம் செலுத்திப்பெற்றுக்கொள்ளவேண்டும். இப்பற்றுச்சீட்டினை பரிசோதனை செய்வதற்கான அதிகாரம் காவல்துறை உறுப்பினர், கிராமஅலுவலர், பிரதேசசபை அலுவலர்கள், நிர்வாகசேவை அலுவலர் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது. அனுமதி பெறாது மணல் ஏற்ற முயற்சித்தல், வீதியில்கொண்டு செல்லல் ஆகியனவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். என்பதனைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்குறிப்பிட்ட இடங்களைத் தவிர்த்து ஏனைய இடங்களில் மணல் அகழ்வு சட்ட விரோதமானதாகும். தடைசெய்யப்பட்ட இடங்களிற் சில வருமாறு,

**01. அக்கராயன் பகுதி**
**02. இரணைமடுப்பகுதி**
**03. முறிப்புப்பகுதி**
**04. தட்டுவன்கொட்டிப்பகுதி**
**05. உமையாள்புரம்**
**06. குறிஞ்சாத்தீவு**
**07. கட்டதீவு**
**08. கண்டாவளைப்பகுதி**
**09. ஊற்றுப்புலம் பகுதி**
**10. பாரதிபுரம்**
**11. கிருஸ்ணபுரம்**
**12. செல்வாநகர்**
**13. வட்டக்கச்சிப்பகுதி**

**மணல் அகழ்வதற்கான அனுமதி வழங்கும் இடங்கள்:**

**01.பிரதேசசபைத் தலைமை அலுவலகம்**
**02. பன்னங்கண்டிச்சந்தி**
**03. வட்டக்கச்சி பொதுநூலகம்**
**04. அக்கராயன் பொதுநூலகம்**
**05. முறிப்புச்சந்தி**
**06. முரசுமோட்டை உபஅலுவலகம்**

இவ்விடங்களில் காலை 8.00 தொடக்கம் மாலை 5.00 மணி வரை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். விடுமுறை நாட்களில் அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. நிறுவனங்களும் பொதுமக்களும் இவ்விடயத்தில் ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

"இயற்கைச்சூழலை ஒற்றுமையுடன் பாதுகாப்போம்"

**பொன் நித்தியானந்தம்,**
**விசேட ஆணையாளர்,**
**கரைச்சிப்பிரதேசசபை,**
**கிளிநொச்சி.**

(சி-9081)



### சிந்தனைக்கு

எமது தாயக மண்ணில்,வரலாற்று ரீதியாக எமக்கு உரித்தான எமது சொந்த மண்ணில், நாம் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழ வேண்டும் என்பதே எமது குறிக்கோள்; இதுவே எமது தேசத்தின் அபிலாசை.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 03-02-2004

## 'கரி நாள்'

சிறிலங்காவின் சுதந்திர தினமான பெப்.4ஆம் திகதியை தமிழர் தாயகப் பகுதியில் கறுப்புநாளாக அனுஷ்டிக்குமாறு பல பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளதோடு, அதற்கான நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர். இந்த வகையில் இம்முறையும் சிறிலங்காவின் சுதந்திரதினம் தமிழர் தாயகப்பகுதியில் துயருக்குரியதொரு நாளாக தமிழ் மக்களால் கைக்கொள்ளப்படும் எனத்துணிந்து கூறலாம்.

இலங்கையைத் தமது காலனியாகக் கொண்டிருந்த பிரிட்டிஷார் இலங்கையை விட்டு வெளியேறும் போது இலங்கைக்கான சுதந்திரம் என்ற ரீதியில் சிங்கவரிடமே ஆட்சியைக் கொடுத்துவிட்டுச் சென்றார்கள். அவர்கள் இலங்கையில் பெரும்பான்மை, சிறுபான்மை என வேறுபட்ட விகிதாசாரத்தில் இரு இனங்கள் உள்ளன என்பதையோ அவை தமது வருகைக்குமுன் தனித்தனி ஆளுகைக்குட்பட்டிருந்தன என்பதையோ கருத்திற்கொள்ளவில்லை.

சனநாயகம் என்ற ரீதியில்-தமது நாட்டில் இருந்து இறக்குமதி செய்ததொரு ஆட்சிமுறையை இலங்கைக்கும் அவர்கள் அறிமுகம் செய்தனர். இதன்மூலம் பெரும்பான்மை ஆட்சி என்ற தத்துவம், பெரும்பான்மை இனத்தின் ஆட்சி என்ற ரீதியில் மாற்றம் கண்டது. இவ் ஆட்சியானது சிறுபான்மை இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதாகவும், அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடுவதாகவுமே இருந்தது.

ஆனால், இலங்கையில் சனநாயகம் என்பது இந்த வகையில் துஷ்பிரயோகம் செய்யப்படும், பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனம் ஒன்றை அடக்கியாள வழிவகுக்கும் எனப் பிரிட்டிஷார் உணர முடியாதுபோய்விட்டது எனக்கூறுவதும் தவறானதாகும். ஏனெனில், சிங்கள அரசியல்வாதிகள் சிறிலங்காவின் சுதந்திரத்தின் முன்பே சிறுபான்மை இனத்தின் மீதான ஒடுக்குமுறை தொடர்பான சமிக்ஞைகளை வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டன. எடுத்துக் காட்டாக 1942இல் தனிச்சிங்கள மந்திரி சபை அமைக்க சிங்களத் தலைவர்கள் முற்பட்டதைச் சுட்டிக்காட்டமுடியும்.

இந்த நிலையில் பிரிட்டிஷார், இலங்கையின் சுதந்திரம் என்ற ரீதியில் சிங்களவருக்குச் சுதந்திரத்தையும், ஆட்சி அதிகாரத்தையும் வழங்கிவிட்டுச்சென்றனர் என்றே கூற முடியும். சிறுபான்மை இனத்தினர் மீது கரிசனையோ, அக்கறையோ கொண்டிருக்கவில்லை என்பதே உண்மையாகும். ஆயினும், சோல்பரி அரசியல் யாப்பில்- சுதந்திர சிறிலங்காவின் முதலாவது அரசியல் யாப்பு- சிறுபான்மையினரின் பாதுகாப்புக் குறித்து ஓரிரு விதிகள் உள்ளடக்கப்பட்டதாலும் அது தமிழர்களின் அபிலாசைகளுக்கு யானைப்பசிக்குச் சோளம் பொரி போன்றதாகவும், இலகுவில் ஆட்சியாளர்களால் தூக்கியெறிந்துவிடக்கூடிய வலிமையற்றதாகவுமே இருந்தது.

ஆனால், இலங்கையின் சுதந்திரம் என்பது ஆரம்பம் முதலே தமிழ் மக்களுக்கு ஓர் இருண்ட நாளாகவும், துக்க நாளாகவுமே ஆரம்பம் முதலே இருந்தது. இது பின்னர் படிப்படியாக வளர்ச்சி கண்டு இலங்கையின் சுதந்திரதின நிகழ்வுகளில் யாராவது தமிழர் பங்கேற்பவர்களாக இருப்பின் அவர்கள் இனத் துரோகிகளாகவும், காட்டிக்கொடுப்பவர்களாகவுமே இருக்க முடியும் என்ற நிலை உருவாகியது.

இதேவேளை 'இலங்கையின் சுதந்திரமானது' தமிழ் மக்கள்மீது திணித்த ஒடுக்குமுறையானது இரு தசாப்த காலத்திற்கு பெரும் இரத்தம் சிந்தும் ஆயுதப் போராட்டத்தை நடத்தவேண்டிய நிர்ப்பந்தத்தையும் கொடுத்திருந்தது. இவ் ஆயுதப்போராட்டமானது இலங்கையின் தமிழ் மக்களின் உரிமைகள், பாதுகாப்பு என்பன உறுதிசெய்யப்படாது விட்டால் இலங்கைத்தீவில் அமைதி என்பது சாத்தியமற்றதொன்று என்பதை வெளிப்படுத்துவதாய் இருந்தது.

இந்நிலையில், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமான யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்தாகியது. சமாதானப் பேச்சுக்களும் தொடங்கப்பட்டன. ஆனால், இவை ஆரம்பிக்கப்பட்டு சுமார் இரண்டு வருடங்கள் முடிவுறும் நிலையிலும் தமிழ்மக்களின் பிரச்சினைகள் எவையும் தீர்க்கப்படவில்லை. தமிழ் மக்களின் சுதந்திரம் உறுதி செய்யப்பட்டதாக இல்லை.

அதாவது தமிழ் மக்கள் சுதந்திரமாக தமது நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ள முடியவில்லை. எடுத்துக் காட்டாகத் தமது சொந்த நிலங்களில் அவர்களால் குடியேற முடியாதுள்ளது. உயர்பாதுகாப்பு வலயம் இதற்குத் தடையாகவுள்ளது. தமது வழமையான தொழில்துறைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. அதாவது உயர் பாதுகாப்பு வலயம் கடற்றொழிலாளர் மீதான கட்டுப்பாடுகள், கெடுபிடிகள் காரணமாகவுள்ளது. அத்தோடு தமிழ் மக்களின் சுதந்திரமான நடமாட்டம் போக்குவரத்து என்பன தடைசெய்யப்பட்டவையாகவுள்ளது. இவையாவற்றிற்கும் மேலாக அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாதுள்ளது.

இந்தவகையில், யுத்த காலத்தின் முன்னரும் சரி, யுத்த காலத்தின் போதும் சரி, தற்பொழுது சமாதானம் நிலவும் காலத்திலும் சரி தமிழ் மக்களின் சுதந்திரம் பேணப்பட்டதாகவோ, உறுதிசெய்யப்பட்டதாகவோ இருக்கவில்லை. இந்நிலையில் தமிழர் தாயகப்பகுதியில் சிறிலங்காவின் சுதந்திரதினம் ஒரு கறுப்பு நாளாக, துக்க நாளாக அமையாது வேறு எவ்வாறு அமைதல் முடியும்?

ஆகையினால், இவ்வருடம் மட்டுமல்ல, தமிழ் மக்களின் உரிமைகள் உறுதி செய்யப்படும் வரையில் சிறிலங்காவின் சுதந்திரம் என்பது தமிழ் மக்களுக்கு கறுப்பு நாளாகவே அமைய முடியும். மறுவளமாக தமிழ்மக்களின் உரிமைகளை உறுதி செய்யாத வரையில் சிங்களவரைப் பொறுத்தும் சிறிலங்காவின் சுதந்திர நாள் மகிழ்ச்சிகரமாக இருப்பதற்கு வாய்ப்பில்லை.

# இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா கண்ணை மூடிக்கொண்டிருக்க முடியாது

## -லக்ஸ்மன் கதிர்காமர் புதுடில்லியில் தெரிவிப்பு

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா இனியும் கண்களை மூடிக்கொண்டிருக்க முடியாது. இனப்பிரச்சினை தீர்வில் இந்தியா தலையிடும் நேரம் வந்துவிட்டது. இவ்வாறு சிறிலங்காவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் சனாதிபதியின் ஆலோசகருமான லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைக் கூறினார்.

1987-1990ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் இந்தியா தனது அமைதிப் படையை இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பிவைத்தது. ஆனால் பிற்பட்ட காலத்தில் அந்த அமைதிப்படை விடுதலைப்புலிகளின் தாக்குதலில் பேரழிவைச் சந்தித்தது. இந்த அனுபவ ரீதியான பேரழிவினை இந்தியா கண்டிப்பாக மறக்க வேண்டும்.

இந்திய அமைதிப்படை வடக்கு-கிழக்கில் இருந்தபோது அது ஆக்கிரமிப்பு படை எனவும் உடனே வெளியேற வேண்டும் எனவும் பெரும்பான்மையான சிங்களவர்கள் தெரிவித்தனர்.

அதன் பின் இன்றுவரை இந்தியா- சிறிலங்கா பிரச்சினையில் தள்ளிநிற்கும் கொள்கையை கடைப்பிடித்துவருவதுடன் சிறிலங்கா அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்கும் தனது ஆதரவை வழங்கி வருகின்றது.

இந்தச் சம்பவங்கள் நடந்து கடந்த பத்து பதினைந்து வருடங்களாகிவிட்டன. எனவே தற்போது இந்தியா கண்டிப்பாக இலங்கையில் நடக்கும் பிரச்சினையை புதிய ரீதியில் அணுக வேண்டும். எமது பிரச்சினையில் இந்தியா நேரடியாகத் தலையிட வேண்டுமென்று நான் கூறவில்லை. ஆனால் சிறிலங் காவிலுள்ள எந்த இடங்களில் இந்தியா ஆர்வமாக உள்ளதோ அதன் மூலமாக வரச் சொல்லியே நான் கேட்கின்றேன்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமான பிரச்சினையை இந்தியாவால் மட்டுமே தீர்த்துவைக்க முடியும். ஆனால் இந்த விடயத்தில் இந்தியா மௌனமாக இருந்தபடியால் அனுசரணையாளராக நோர்வேயும், சமாதானப் பங்காளராக ஜப்பானும் இலங்கையில் தலையிட்டன என அவர் மேலும் கூறியுள்ளார்.

# இந்தியா-சிறிலங்கா பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திட வாஜ்பாய் அரசு பின்னடிப்பு!

## -தேர்தலை எதிர்பார்த்துக் காத்திருப்பாம்

இந்தியாவுக்கும் சிறிலங்காவுக்குமிடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடுவது ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக இந்தியப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலின் பின்னரே இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவில் புதிதாக ஆட்சியமைக்க இருக்கும் அரசாங்கமே சிறிலங்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டுமென்ற கருத்து பாதுகாப்பு அமைச்சிடம் உள்ள கருத்தாக நிலவுவதையடுத்து, இந்த ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதில் வாஜ்பாய் அரசு தாமதித்து வருவதாகபாதுகாப்பு அமைச்சை ஆதாரம் காட்டி கூறப்படுகின்றது.

இந்திய- சிறிலங்கா பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஒத்தி வைக்குமாறு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் சார்பில் இந்தியா சென்றுள்ள மிலிந்த மொறகொட கோரிக்கை விடுத்திருப் பதாகவும் இந்த ஒப்பந்தம் தமிழ் மக்களையும் அவர்களின் நலன்களுக்கும் உத்தேசித்த இடைக்கால அதிகார சபைத்திட்டத்திற்கு எதிரானது என்றும் விடுதலைப்புலிகள் கடுமையாக ஆட்சேபித் திருந்ததாகவும் இந்திய செய்திகள் கூறுகின்றன.

# அரசியலமைப்பும் சந்தர்ப்பவாத அரசியலுமே தற்போதைய பிரச்சினைகளுக்குக் காரணம்

## அஸ்கிரிய மகாநாயக்கர் உடுகம சிறிபுத்தரகித்த தேரர்

(கொழும்பு)

இரு வேறுபட்ட கருத்துக்களைக் கொண்ட இருகட்சிகள் இணைந்திருப்பதால் இதனால் ஏற்படும் விளைவுகள் தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் தற்போது எழுந்துள்ள பிரச்சினைகள் அனைத்துக்கும் அரசியலமைப்பும் சந்தர்ப்பவாத அரசியலுமே காரணம் எனவும் அஸ்கிரிய மகாநாயக்கர் உடுகம சிறிபுத்தரகித்த தேரர் கூறியுள்ளார்.

அஸ்கிரிய மகா விகாரைக்கு விஜயம்செய்த வணிக, நுகர்வோர்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் அவர் மேலும் கூறியிருப்பதாவது,

நாட்டையும் மக்களையும் பற்றிச் சிந்திக்காது தமது பதவிகளைப் பற்றி மட்டும் கவனமெடுக்கும் அரசியலை நிராகரிக்க வேண்டுமெனவும் இரு பிரதான கட்சிகளும் இணக்கப்பாட்டுக் வராததால் மூன்றாவது சக்தி ஒன்று தலையிடுவதைத் தடுக்க வேண்டும் எனவும் தற்போதைய தேர்தல் முறையை மாற்றி 1978க்கு முன்பிருந்த தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானின் பாதுகாப்பு நிலைகளால் இந்திய கிரிக்கெட் சபை கவலை

## ஆராய இந்தியக் குழு நடவடிக்கை

இந்திய கிரிக்கெட் அணியின் பாகிஸ்தான் பயணத்துக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை பாகிஸ்தான கிரிக்கெட் சபை ஆரம்பித்துள்ளது.

மூன்று டெஸ்ட் மற்றும் ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட இந்தக் கிரிக்கெட் தொடருக்காக இந்திய அணி அடுத்த மாதம் பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறது. பாகிஸ்தானில் அதிகரித்து வரும் தீவிரவாதத் தாக்குதல் சம்பவங்கள் இந்திய கிரிக்கெட் சபையை கவலையடையச் செய்துள்ளது.

இதையடுத்து மூன்று பேர் அடங்கிய பாதுகாப்புக் குழுவை இந்தியக் கிரிக்கெட் சபை அடுத்த வாரம் பாகிஸ்தான் அனுப்புகிறது.

இந்திய அணி விளையாடும் இடங்கள் இன்னும் முடிவாகாவிட்டாலும் கூடபோட்டிக்குத்தேர்வு செய்யப்பட்ட இடங்கள் அனைத்திலும் பாதுகாப்பு மற்றும் புலனாய்வு வேலைகளை பாகிஸ்தான் தொடங்கி விட்டது.

இதுபற்றி பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரிகள் கூறுகையில்;

போட்டிகள் நடத்த தெரிவு செய்யப்பட்ட பகுதிகளின் பாதுகாப்பு குறித்து விரிவான புலனாய்வுகள் தொடங்கிவிட்டதாகவும் இதற்காக எங்கள் கிரிக்கெட் சபையின் தொடர்பாளர் சமிஉல் ஹசன் தலைமையில் இருவர் குழு அமைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர்.




# தலைமைப் பதவிக்கு போட்டியிடமாட்டேன்

## -திலங்க சுமதிபால அறிவிப்பு

சிறிலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நிர்வாகக் குழுவிற்காக எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் தேர்தலில்தான் போட்டியிடப் போவதில்லையென தற்போதைய தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

1999 இல் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியைப் பார்வையிட பாதாள உலகக் குழுவொன்றின் தலைவரை சட்டவிரோதமாக லண்டனுக்கு அனுப்பிய குற்றச்சாட்டின் பேரில், திலங்க சுமதிபால தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் சிறிலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் பதவியில் இவர்தொடர்ந்தும் இருந்தால் அது சர்வதேச ரீதியில் சிறிலங்கா கிரிக்கெட் அணியின் புகழுக்கு களங்கத்தை ஏற்படுத்தலாமென பரவலாக குற்றம் சாட்டப்பட்டு வரும் நிலையில் தலைவர் பதவிக்காக மார்ச் மாதம் நடைபெறும் போட்டியில் தான் கலந்து கொள்ளப் போவதில்லையென திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

# தமிழர்கள் இன்று தலைநிமிர்ந்து நிற்க எம் போராளிகளின் தியாகமே காரணம்

## வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர்

(செட்டிகுளம்)

நாங்கள் சமாதானத்திற்காகத் தான் பாடுபட்டுக் கொண்டு உள்ளோம் எமது மக்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் ஆயுதம் ஏந்திப் போராடினோம். இன்று சர்வதேச ரீதியில் தமிழர்கள் தலைநிமிர்ந்து நிற்க எமது போராளிகள் செய்த தியாகமே காரணம் என்று வவுனியா வடக்குப் பிரதேசத்தில் மக்களை சந்தித்து உரையாடியபோது வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

வவுனியா வடக்குப் பிரதேசத்தில் உள்ள மக்களை தொடர்ச்சியாக சந்தித்து சமகால அரசியல் நிலைப்பாடு தொடர்பாக மக்களுக்கு வவுனியா அரசியல் துறையினர் விளக்கம் அளித்து வருகின்றனர். நேற்று வவுனியா வடக்கு மருதோடை, வெடிவைத்தகல், கோவில் புளியங்குளம் ஆகியபிரதேச கிராம மக்களை சந்தித்ததுடன் தேசிய எழுச்சிப்பேரவையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. நெடுங்கேணி பொறுப்பாளர் இந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச மக்கள் பலர் கலந்து கொண்டனர். (21)

# அவசர பொதுத் தேர்தல் நடைபெற்றால் அதிக பலத்துடன் ஆட்சியமைப்போம்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை

அவசரமான பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்படுமானால் முன்னரை விட சக்தி மிக்க அரசாங்கம் ஒன்றை ஐக்கிய தேசியக்கட்சி அமைக்கும் என சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

பதுளை ஹாலியெலவில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பிரதமர் உரையாற்றினார். சனாதிபதியுடன் நிர்வாகத்தில் இணைந்து செயற்படுவது தொடர்பான நடவடிக்கைகள் குறித்து அடுத்து வரும் இரண்டு தினங்களுக்குள் நாட்டு மக்களுக்கு அறிவிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார். போர்நிறுத்த உடன்பாட்டை பாதுகாத்து நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி இட்டுச் செல்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

நுகர்வோரின் நலன் கருதியே அரசாங்கம் கோதுமை மா எண்ணெய் மற்றும் உரவகைகள் போன்ற அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளது. இவ்வாறான திட்டத்தின் கீழ் இன்னும் பத்து வருடத்திற்குள் புதிய இலங்கையை கட்டியெழுப்புவதே அரசாங்கத்தின் கொள்கை எனவும் பிரதமர் அங்கு தெரிவித்தார். (32)

# உள்ளூராட்சித் தேர்தலை பிற்போட்டால் விசேட நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்

## அமைச்சர் ஹக்கீம் ஐ.தே.மு.வுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலை பின்போடுவதற்கு ஐக்கிய தேசிய முன்னணி நடவடிக்கை எடுத்தால் அது தொடர்பாக விசேட நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை தமது கட்சிக்கு நேரிடும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அம்பாந்துறையில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறினார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் சகல முஸ்லிம் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டுமென்று யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் எமது கட்சிதயார். அவ்வாறாயின் சகல கட்சிகளும் மரச்சின்னத்தின் கீழ் போட்டியிட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

# ரயில் சேவை வேலை நிறுத்தம் தொடரின் அரசதுறை முழுமையாகச் செயலிழக்கும்

## - தொழிற்சங்க சம்மேளனம் எச்சரிக்கை

சிறிலங்கா ரயில் சேவை ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடங்கி ஆறு நாட்கள் கடந்துவிட்ட நிலையில் இன்னும் ஒருவார காலத்தினுள் பிரச்சினையைத் தீர்க்க அரசு தவறுமாயின் அரச துறையைச் சார்ந்த சகல தொழிற்சங்கங்களின் உதவியுடன் போராட்டம் நடத்தத் தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை தொழிற்சங்கச் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வேலை நிறுத்தம் காரணமாக பயணிகள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்குவதாக சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சர் திலக் மாரப்பன கருத்துத் தெரிவிக்கையில், ரயில் சேவை வேலை நிறுத்தத்திற்கு காரணமான விடயங்களைக் கருத்திற் கொண்டு பல சலுகைகள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ரயில்வே அதிகார சபை அமைக்கப்படுவதனால் ரயில்வேத் திணைக்களம் ஒழிக்கப்படமாட்டாது என்றும் அரசாங்கம் பிரச்சினையை பேசித் தீர்க்கத் தயாராக உள்ளதாகவும் பயணிகளுக்கு சிரமம் ஏற்படாமல் ஊழியர்களை வேலைக்குத் திரும்புமாறும் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# நாடு ஏற்கனவே பிளவுபட்டுவிட்டது அழிவிலிருந்து தப்ப வலுவான அணி அவசியம்

## - ஜே.வி.பி. பிரச்சாரச் செயலாளர் டில்வின் சில்வா

(கொழும்பு)

அரசியல் கட்சிகள், மதங்கள், இனக்குழுக்கள் என்று பலதரப்பட்ட அம்சங்கள் உள்ள போதிலும் நாடு ஏற்கனவே இரண்டாக பிளவுபட்டுவிட்டது என ஜே.வி.பி. இன் பிரச்சாரச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; எனவே, நாட்டை இனிவரும் அழிவில் இருந்து தடுப்பதற்கு முற்போக்கு அணிக்கு வலுவான பலம் அவசியம் என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான அணியைத் தோல்வி காணச் செய்து முற்போக்குச் சக்திகள் இணைந்து முன்னேறுவதற்கு இறுதி வெற்றி காணப்படும் வரை தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் ஒக்ஸ்பாம் நிறுவன ஆதரவுடன் அழகியல் கலாமன்றம் வழங்கும் எயிட்ஸ் பற்றிய கருத்தரங்கானது கடந்த சனிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அயற்பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வானது எயிட்ஸ் ஒரு உயிர்கொல்லி. அதில் இருந்து தப்பிக்கொள்ளும் வழிவகைகள் எடுத்துரைக்கும் முகமாக எயிட்ஸ் விழிப்புணர்வு எனும் நாடகமும் பாடசாலை முதல்வர் சந்திரராஜா அவர்களின் உரையும் சுகாதார பிரிவின் நிர்வாகி ரவிச்சந்திரன் ஆகியோரின் உரையும் நடைபெற்றது. (12)

# மழைவீழ்ச்சி இன்மையால் நீர்மின்விநியோகம் பாதிப்பு

நீரேந்துப் பகுதிகளில் மழைவீழ்ச்சி இல்லாத காரணத்தினால் நீர் மின்சார உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பதாக சிறிலங்கா மின்சாரசபை தெரிவித்துள்ளது. இதனையடுத்து ஏனைய உற்பத்தி மூலங்கள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இத்தகைய நடவடிக்கையால் அலகொன்றிற்கு ரூ.2.25 சதம் மேலதிகமாக செலவாகும். இதனை அரசாங்கம் பொறுப்பேற்பதென முடிவு செய்துள்ளது. (32)

# பாதாளக் குழுக்களுக்கு ஆயுதம் வழங்கிய தொழிற்சாலை கண்டுபிடிப்பு!

பாதாள உலக கோஷ்டியினருக்கு ஆயுதம் தயாரித்து விநியோகம் செய்த தொழிற்சாலை ஒன்று கடவத்த மாவரமண்டிப் பகுதியில் கடந்த 30ஆம் திகதி கம்பஹா பொலிசாரினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதில் கைத்துப்பாக்கிகள் மற்றும் பயங்கர ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டு நூற்றுக் கணக்கில் குறைந்த விலைக்கு விற்கப்பட்டுள்ளதென பொலிசார் தெரிவித்துள்ளனர்.

பத்துவருட காலமாக 70 வயது நிரம்பிய ஒருவர் இதை நடத்தி வந்துள்ளார். என இவரைக் கைது செய்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் தெரிவித்துள்ளார்.

## -கிளி. மாவட்ட செயலகத்தில்-

# சாரதி அனுமதிப் பத்திரம், வாகனப்பதிவு வழங்க இடம்பெயர் சேவை

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் அனைத்து வாகனங்களுக்குமான சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கலும் ஆவணங்கள் தவறவிடப்பெற்ற அனைத்து வாகனங்களைப் பதிவு செய்வதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் போக்குவரத்து திணைக்களத்தினரால் நடமாடும் சேவை மூலம் எதிர்வரும் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெறவுள்ளது.

எனவே இவற்றிற்கான விண்ணப்பங்களை 9 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலுள்ள மோட்டார் வாகனப் போக்குவரத்துக் கிளையில் ஒப்படைக்குமாறும், கிளிநொச்சி மாவட்டத்தினை நிரந்தரமாகக் கொண்டவர்களின் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படுமென கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார். (சோ)

## - அத்தியாவசியப் பொருட்களின் -

# விலை ஏற்றத்துக்கு எதிராக மகளிர் அமைப்பு போராட்டம்

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு வாழ்க்கை செலவினம் உயர்வு ஆகியவற்றுக்கு எதிராக பெண்கள் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் சோஷலிச மகளிர் சங்கம் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

நாளுக்குநாள் பொருட்களின் விலையை அதிகரிப்பதன் மூலம் அரசாங்கம் மக்களுக்கு கஷ்டங்களை ஏற்படுத்தி வருவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

அரிசி, மா, சீனி ஆகியவற்றின் விலைகளும் மின்சாரம், தொலைபேசி, காஸ் ஆகியவற்றுக்கான கட்டணங்களும் அதிகரித்துள்ளன என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டிக் காட்டினர்.

# சுகாதார ஊழியர் உண்ணாவிரதம் நேற்று முடிவுக்கு வந்தது

(கொழும்பு)

சம்பள முரண்பாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் படி கோரி சுகாதார சேவை தொழிற்சங்கங்கள் கூட்டமைப்பு கடந்த மாதம் 19-ஆம் திகதி தொடக்கம் மேற்கொண்டு வந்த சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் நேற்று முடிவுக்கு வந்தது.

குறிப்பிட்ட சுற்றறிக்கையை சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன, தொழிற் ்க கூட்டமைப்பு இணை ஏற்பாட்ட ார் சமன் ரத்ன பிரியவிடம் அமைச்சில் வைத்துக் கையளித்தார்.

உண்ணாவிரதம் இருந்தவர்கள் இளநீர் அருந்திப் போராட்டத்தை கைவிட்டனர்.

### கடத்த...

அண்மை நாட்களாக வாகனங்கள் வெளி இடங்களில் இருந் தும் வவுனியாவில் இருந்தும் வாடகைக்கு என்று அமர்த்தி அந்த வாகனங்களினை கடத்திச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்து இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (21)

### கிருலப்பனையில்...

மற்றுமொரு பிரதான பாதாள உலகக் குழுவை அழிப்பதற்காக சென்று கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

அத்தோடு ஆயுதங்கள் பலவும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. கொழும்பு மயிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப் பட்ட இக்குழுவினரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (32)

### சமாதான...

முன்கொண்டு செல்வது என்பது பற்றி பேசப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்தப் பேச்சுவார்த்தை கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற ஏற்கனவே திட்டமிட்டிருந்தபோதும் அது அப்போது கைகூடவில்லை. (32)

### சிறில...

வனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் கல்விக் கூடங்கள், பாடசாலைகள், தனியார் வர்த்தக நிறுவனங்கள் ஆகிய அனைத்தும் பெப்ரவரி 4 அன்று தமது கடமைகளை இடைநிறுத்தி சுதந்திர நாட்கொண்டாட்டங்களைப் பகிஸ்கரிக்குமாறு யாழ்.வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகின்றது. (24)

### வெளிநாட்டு...

வேண்டுமென ஜே.வி.பி. பொதுச் செயலாளர் டில்வின் சில்வா கூறினார். தற்போதைய அரசியல் நிலைமையிலிருந்து நாட்டைப் பாதுகாக்கவே கூட்டணியுடன் சேர்ந்ததாக தேசிய ஐக்கியமுன்னணி பேரியல் அஷ்ரப் கூறினார். நாட்டைப் பாதுகாக்க இதுவே தருணம் என மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஸ் குணவர்த் தன கூறினார். இதுவே ஈழமக்கள் சனநாயகக் கட்சி (ஈபிடிபி) ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவை வெளியிலிருந்து வழங்குவதாகத் தெரிவித்துள்ளது.

### யாழ்...

இதேவேளை நுழைவாயில், விளம்பரப்பலகைகள் மற்றும் இராமநாதன் மண்டபம் உள்ளிட்ட பல பகுதிகளிலும்,பல்கலைக்கழக நிர்வாகத்தைக் கண்டிக்கும் சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டிருந்தது.அத்துடன் நேற்று காலை வேளை நிர்வாக அலுவலகம் முன்பாகக் குவிந்திருந்த ஊழியர் சங்கப்பிரதிநிதிகள் துணைவேந்தர் உள்ளிட்ட எவரையும் கடமைக்குச் செல்ல அனுமதித்திருக்கவில்லை.

மேற்குறித்த 15 அம்சக்கோரிக்கையை வலியுறுத்தி ஊழியர் சங்கம் கடந்த மாதம் 7ம் திகதியும் இவ்வாறனதோர் போராட்டத்தை முன்னெடுத்திருந்ததும், பின்னர் பல்கலைக்கழக மூதவை உறுப்பினர்கள் சிலரது கோரிக்கையை அடுத்து தற்காலிக கால அவகாசமொன்றை வழங்கி பிற்போடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.